வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராசப் பெருமாள் தேவஸ்தான



# இராஜகோபுர கும்பாபிஷேக மலர்

தேசிய நூலகப் பிரிவு
பொது நூலக சேவை
யாழ்ப்பாணம்
5

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

யாழ்ப்பாணம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# இராஜ கோபுர
# கும்பாபிஷேக மலர்

## 23 - 4 - 1978

72.P
593 C.C

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாயில்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தான திருப்பணிச்சபை
இராஜகோபுர கும்பாபிஷேக வைபவத்தை முன்னிட்டு
இம்மலரை வெளியிடுகின்றது.

1978

ஓம்

ஸ்ரீ ராமஜெயம்

# சமர்ப்பணம்


ஈழத்தின் கண் சிறப்புற்று விளங்கும் வைணவத் தலங்களில் ஒன்ருன வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் சென்ற மூன்று ஆண்டுகளாக சில இலட்ச ரூபாய் செலவில் இராஜகோபுர மணிக்கோபுரத் திருப்பணிகள் நிறைவெய்தப் பெற்று நிகழும் காலயுக்தி வருஷம் சித்திரைத் திங்கள் 10ம் நாளாகிய நன்னுளில் இராஜகோபுர மணிக்கோபுர கும்பாபிஷேகம் மிகச்சிறப்புற நடைபெறவிருக்கின்றது.

இவ் ஈழத்திருப்பதியில் ஸ்ரீ தேவி, பூமிதேவி சமேதரராக எழுந்தருளிநிற்கும் ஸ்ரீ வேங்கடேச வரதராசப் பெருமாள் சகல ஜீவராசிகளையும் காத்து ரட்சித்து, மக்கட்கு அருள்பாலித்து, தம்மை நாடும் பக்தர்கட்கு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகின்ருன்

வல்வினைகள் தீர்க்கும் திருவேங்கடவனின் இராஜகோபுர, மணிக்கோபுர கும்பாபிஷேகத்தையொட்டி இச்சிறிய மலரை ஓங்கியுலகளந்த உத்தமன் வண்ணையம்பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ வேங்கடேச வரதனுகிய எம்பெருமானின் திருப்பாத கமலங்களிற் சமர்ப்பித்து வணங்குகின்ருேம்

சுபம்!

இங்ஙனம்
வண்ணை ஸ்ரீ வேங்கடேச
வரதராஜப் பெருமான் கோவில்
திருப்பணிச் சபை.



இராமநாதபுரம் தேவஸ்தான சிற்பாசிரியார்

**விஸ்வப் பிரம்ம ஸ்ரீ வீரப்ப ஆச்சாரி நாகலிங்க ஸ்தபதி**



பிரம்ம ஸ்ரீ சி. சுப்பிரமணிய சர்மா
தேவஸ்தான அருட்சகர்



பிரம்ம ஸ்ரீ சி. வேங்கட சுப்பிரமணியக் குருக்கள்
தேவஸ்தான அர்ச்சகர்



திரு. R. அமரகுலசிங்கம்
களஞ்சியப் பொறுப்பாளர்

HIS HOLINESS
SRI KANCHI KAMAKOTI PEETADHIPATHI

# Jagatguru Sri Sankaracharya Swami Mutt

KANCHEFPURAM

*Camp: Seevalapuri* *Date: 16-3-1978*

*To* **Sri K. Krishnaswamy**

தாங்கள் எழுதிய கடிதம் வந்து சேர்ந்து ஸ்ரீமஹா ஸன்னிதானத்தில் விஞ்ஞாபனம் செய்யப்பட்டது.

ஸ்ரீ மஹாஸன்னிதானத்தில் அனுக்கிரஹித்த ப்ரஸாதம் இவற்றுடன் அனுப்பியிருக்கிறோம்.

# ஆசியுரை


பூவுலகின்கண்ணே பிறந்த மக்கள் ஆன்மாக்கள் தாம்தாம் செய்த தீவினைகளை நீக்கி நல்வினைப்பயனை அடைந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வதற்காகவே தொன்று தொட்டு எல்லா இடங்களிலும் ஆலயங்களை அமைத்து விக்கிரகங்களைப் பிர திஷ்டை செய்து நித்தியம் நைமித்தியம் காமியம் என்ற முறை யில் கிரியை நெறிகளை வழுவாது செய்து வழிபாடுகளை இயற்றி சகல நலன்களையும் அதன் வாயிலாகப் பெறக் கூடியதாக அமைகிறது. அத்தகைய நிலையான ஆலயத்திற்கு இன்றியமை யாத அங்கம் இராஜகோபுரமாகும். இதையே கோபுரதரிசனம் கோடிபுண்யம் என்று கூறப்பட்டு இருக்கிறது. ஆகவே இப் பெரும் பாக்யத்தை அடைந்த புண்ணியவான்கள் வடநாடு, தென்னாட்டிலே அனேகர் இருக்கிறார்கள். ஆகவே இப்பெரும் கைங்கரியத்தை நடத்திமுடிப்பது சாதாரணமான செயலில்லை. இருந்தும் இக்கலியுகத்தில் ஒரு சிறிது தர்மம் காக்கப்பட்டமை யால், இங்கு ஈழத்திருப்பதி எனக் கூறக்கூடிய அமைப்புப் பொருந்திய ஸ்ரீ வண்ணை வேங்கடேஸவரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்திற்கும் அதிஉன்னத உயர்ந்த ஏழுநிலங்கொண்ட இராஜகோபுரத்தை அமைக்கும் திருவருள் கூட்டியது. இக் கைங்கரியம் பூர்த்தியாகி, வரும் சித்திரை பத்தாம் நாளில் சிறந்த கும்பாபிஷேகத்தையும் தெரிசிக்க ஸ்ரீமந் நாராயணப் பெருமானின் திருவருள் கூட்டி இருக்கிறது. இவ்வைபவம் பொலிவுடன் நடைபெறவும் இக்கும்பாபிஷேக நிகழ்ச்சியை முன்னிட்டு ஷெ தேவஸ்தான சபையார் வெளியிடும் மலரும் சிறப்பாக மக்களின் உள்ளங்களில் பதிந்து மலரவேண்டும் எனவும் தர்மம் வேதநெறி சமயம் வளர திருவருள் பொலிய வேண்டும் மெனவும் பக்தரக்ஷகமூர்த்தியின் பாதகமலங்களைப் பிரார்த்தித்து ஆசிகூறுகிறேன்.

இங்ஙனம்

**பிரம்மஸ்ரீ சாமிவிஸ்வநாதக் குருக்கள்**

பிரதமகுரு

ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்



பிரம்ம ஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்
( பிரதான குருக்கள் )



து. சீனிவாசகம் *B. A. (Lond)*
தத்துவக்காரர், சபைத்தலைவர்



V.N.C. நாராயணசாமி



ஜோ. கிருஷ்ணசாமி



க. பழனிச்சாமி



C. C. குமாரசாமி

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

உ
ஓம் நமோ நாராயணாய

# கோபுரதர்சனம் கோடிபாப விமோசனம்

நியாயசிரோமணி
பிரம்மஸ்ரீ: கி, சுப்பிரமண்யசாஸ்திரிகள்

ஓர் ஆலயத்தை நாம் நிர்மாணிக்க ஆரம்பிக்கும் பொழுது கர்ப்பக்கிருகத்தில் ஓர் சூக்ஷ்ம லிங்கத்தை அமைக்கிறோம். அது விஷ்ணுமுதலான எந்தத் தேவதையாகவும் இருக்கலாம். லிங்கம் என்பதற்கு அடையாளம் என்பது கருத்து. ஒரு ஆலயமானது ஒரு பிராகாரம் முதல் ஏழு பிராகாரம் வரை அமைந்திருப்பதை சாதாரணமாகப் பாரதநாட்டிலும் வேறு பல இடங்களிலும் காணலாம். கிழக்கு முதலாக நான்கு திக்குகளிலும் வாயில்கள் அமைக்கப் பெற்று அவ்வாயில்களின் மேல் ஸ்தூலலிங்கம் என்றழைக்கப்படும் கோபுரம் அமைக்கப்படுகின்றது. ஒரு கோவிலில் நான்கு திக்கிலும் நான்கு வாயில்களிருந்தால் மொத்தம் பதினாறு கோபுரங்களும் அமைக்கப்படுகின்றன. ஸ்தூலலிங்கம் என்றால் வெளிப்படையாகத் தெரியும் அடையாளம் என்பது கருத்து. எப்பொழுதுமே எல்லோராலும் தர்சனம் செய்து கொள்ளக்கூடியது கோபுரம் என்றழைக்கப்படும் ஸ்தூலலிங்கம். இந்தக் கோபுரமாகிற ஸ்தூலலிங்கத்தை நன்கு தர்சிக்கும் ஒருவர் உள்ளே கர்ப்பக்கிருஹத்திலுள்ள சூக்ஷ்மலிங்கம் விஷ்ணுவா, சிவனா, முருகனா, என்றறிவதற்கு ஏதுவாக இருக்கிறது. இந்தக் கோபுரங்களெல்லாம் ஒன்பது அடுக்குகள், ஏழு, ஐந்து, மூன்று அடுக்குகள் என்ற முறையில் அமைக்கப்படுகின்றன. இந்த கோபுரங்களை ராஜகோபுரம் என்று அழைக்கிறோம். இந்தக் கோபுரங்களில் ஆண்டவனுடைய லீலைகள் அவதாரங்கள் முதலானவைகளெல்லாம் சிற்பங்களாகப் போடப்பட்டு வர்ணம் தீட்டப்பெற்று மிக அழகுள்ளவைகளாக விளங்குகின்றன. இந்தச் சிற்பங்களைப் பார்த்து இது விஷ்ணுகோவில் அல்லது வேறு கோவில் என்று நாம் ஊகிக்து அறிய முடியும். இதைத்தவிர கோபுரம் தாங்கிகள் திருஷ்டி தோஷங்கள் முதலியவற்றை நீக்கக்கூடிய சில உருவங்கள் கோபுரங்களில் அமைக்கப்படுகின்றன. ஆசௌசம் முதலான காலங்களிலும் வசதிக் குறைவான காலங்களிலும் இக் கோபுரத்தை தரிசிப்பதன் மூலம் நாம் எவ்வளவோ கோடிபாபங்களை நீக்கிக்கொள்ளலாம். இதே கோபுரங்களில் விமானத்தில்போல மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது ஆகிய கலசங்கள் வைத்துக்கும்பாபிஷேகம் நடாத்தப்படுகின்றது. அந்தந்தக் கோபுரத்தைத் தரிசித்தவுடன் ஆழ்வார்கள் நாயன்மார்கள் எல்லோரும் பக்தி பரவசமடைந்து மெய்மறந்து பாசுரங்கள் பாடி பரமாத்மாவின் திருவடியை அடைந்துள்ளார்கள். இப்படிபட்ட சிறந்த பாடல் பெற்ற ஸ்தலங்களின் கோபுரங்களின் கலசங்களில் அந்தந்தத் தேவைகளை ஆவாஹணம் செய்து யாகங்கள் அமைத்து யாக கலசங்களிலும் அதே தேவதைகளை ஆவாஹனம் செய்து அந்தக் கும்பநீரைக் கோபுரங்களுக்கு அபிஷேகம் செய்து கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தப்படுகின்றது.

இவ்வகையிலே யாழ்ப்பாண நகர மத்தியிலே அமைந்திருக்கும் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவாலயத்திலே கிழக்குவாசல் கோபுர ஸ்தூலலிங்கமானது மகோன்னதமாகப் பெரும் பொருட்செலவில் கட்டப்பெற்று கம்பீரமாக்காட்சியளிக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கின்றது. இந்தக்கோபுரம் சுமார் இரண்டுமைல் தூரம் பக்தகோடிகளுக்குக் காட்சிகொடுத்துக்

கொண்டு இந்த ஈழநாட்டையே புனிதமாக்கக்கூடிய ஒரு சிறந்த ஸ்தூலலிங்க மாக அமைக்கப் பெற்றுள்ளது.


இதை அமைப்பதற்குத் தலைப்பட்ட கோவில் நிர்வாகஸ்தர்களான பத்மசாலி வைஷ்ணவர்களும், இதற்கு நிதி உதவிகொடுத்த செல்வந்தர்களும், இதைத் திறம்பட நிர்மாணித்த சிற்பாசாரியர்களும், இதற்கு உறுதுணையாக உதவிசெய்த உதவியாட்களும், இதற்கு யாகமண்டபம் அமைத்து சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்த குருமணிகளும், இதை என்றென்றும் தரிசித்து வேங்கடேச வரதராஜப் பெருமாளின் அருளைப் பெறும் நாமும் வைகுண்டவசியான விஷ்ணு பரமாத் மாவின் அருளைப்பெறுவோமென்பதில் சந்தேகமில்லை.

வைகானசம் பாஞ்சராத்ரம் என்னும் இருவகை ஆகமங்களுள் வைகானச ஆகமத்தைப்பின்பற்றி மிகத்திறம் படநடாத்தப்படுகின்ற இவ்வைகுண்டபுருஷ ரின் ஆலயத்தில் நித்திய நைமித்திய கருமங்களெல்லாம் மிகவிசேஷமாக நடாத் தப் படுவதோடு, கிருஷ்ணஜயந்தி, ஸ்ரீராமநவமி, வைகுண்டஏகாதசி, நவராத்ரி, மஹோத்ஸவங்கள், சங்ராந்தி புண்யகாலத்தில் கோபூஜை, உறியடி உற்சவம், தீபபூஜை முதலான உற்சவங்களெல்லாம் மிகவிசேஷமாக நடத்தப்பட்டு வருகி கின்றன. ஸ்ரீவைகுண்டம் முதலான 108 வைஷ்ணவஸ்தலங்கள்போல இந்த ஆலயம் இலங்கைவாழ் பக்தர்களுக்கு வைகுண்டநாதரின் அருளைவாரிவாரி வழங்கி பாபிகளான நம்முடைய பாபங்களை அகற்றி சாஸ்வதமாக வைகுண்ட பதவியை நம்எல்லோருக்கும் அளித்து இம்மையிலும் மறுமையிலும் நம்மை உய்யவைக்கக்கூடிய ஓர் சிறந்த ஆலயமாக விளங்குகின்றது. இன்னும் நான்கு திக்குகளிலும் கோபுரங்கள் அமைக்கப்பெற்று வைகுண்டநாதரின் ஆராதனை களை இன்னும் சிறப்புறப் பெற்று இவ்வாலயம் விளங்க வைகுண்டநாதனை ஸ்ரீவேங்கடேசவரதராஜப் பெருமாளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிப் பிரார்த்திப்போமாக.

ஓம் நமோ நாராயணாய ஸ்தூலலிங்கரூபாய ஸ்ரீவேங்கடேச வரதராஜாய நம: கோபுரதர்சனம் கோடிபாப விமோசனம்!

சுபம்

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா — உன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு.



ஸ்ரீராமன் விஸ்வாமித்திர முனிவரின் வேள்வி காத்து தண்டகாருண்யத்தில் தாடகையை வதஞ்செய்த காட்சி.



விஸ்வாமித்திர முனிவர் பின்னே ஸ்ரீராமனும் இலக்குவணனும் தண்டகாருண்யம் செல்லும் காட்சி.



ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான ஸ்ரீவெங்கடேசப்பெருமாள்



ஸ்ரீலெக்ஷ்மி நாராயணன்

# தமிழர் கட்டிய கோயில்கள்

— க. சி. குலரத்தினம் — மில்க்வைற் செய்தி ஆசிரியர்.

கடவுள் உலகத்தைக் காக்கிருர். அவரைத் தியானஞ் செய்யும் மெய்யடியார் களுக்கு அவர் ஒவ்வோர் திருவுருவில் காட்சியளிக்கிருர். அவரை வழிபட்டு முத்தியின்பம் பெறுவதே நமது பிறவிப் பயன் என நம் முன்னேர் அநுபவ ரீதியாக அறிந்து அங்ஙனம் பயனடைந்து நமக்கும் அந்நெறியைப் போதித் துச் சென்ருர்கள்.

நம் முன்னேர் நமக்குச் சொன்னவை சனதன தர்மம் என வழங்குகிறது. அது அழியாத மதம் என்றும் புராதன நியதி என்றும் வழங்கும். அது வேதத்தை அடிப்படையாகக் கொண்டதால் வைதிக தர்மம் எனவும் வழங்கும். அதைப் பொதுவாக இந்து சமயம் என எல்லோரும் வழங்குவர்.

இந்து சமயத்திதில் சிவன், சக்தி, விஷ்ணு, விநாயகர், சுப்பிரமணியர், சூரியன் முதலான மூர்த்தங்களை நம்முன்னேர் வணங்கி வரம் பெற்று வளம் கொண்டு வாழ்ந்து பெரும் பேறெய்தினர். தாம் வணங்கும் தெய்வத்துக்குத் திருக்கோயில்களையும் திருக்குளங்களையும் அமைத்தனர்.

திருக்கோயில்கள் அழகானவை, வானளாவிய கோபுரங்களையும், விமானங் களையும், மணிக்கோபுரங்களையும், சுற்றுமதில்களையும், நந்தவனங்களையும், தீர்த் தங்களையும், தலவிருட்சங்களையும் கொண்டவை. முற்காலத்தில் செங்கல்லாலான சிறுகோயில்கள் கருங்கல்லாலான பெருங்கோயில்களாயின. முன்னர் மூலத்தா னம் எனப்பட்ட கர்ப்பக்கிருகங்களுக்கு மேல் மிகப் பெரியனவான விமானங் கள் அமைக்கப்படும் வழக்கம் பிற்காலத்தில்மாறி மிகப்பெரிய கோபுரங்கள் அமைக்கும் வழக்கமாக இடம் பெற்று வந்தது. கோபுரங்கள் திருக்கோயிலின் தூல வடிவமாயின. கோபுரதரிசனம் பாவ விமோசனம் என்றும், கோபுரதரி சனம் கோடிபுண்ணியம் என்றும் கருதப்பட்டது.

எம்முந்தையோர் கட்டிய திருக்கோயில்களை நாம் பார்க்கும்போது இவற்றை மனித சக்தியா தெய்வசக்தியா செய்து நிறைவேற்றியது என்று எண்ணத் தோன்றுகிறது. அதற்குக் காரணம் அற்புத வேலைப்பாடுகள், வண்ணவடிவங் கள், அழகான சிற்பங்கள், கண்ணைக்கவரும் ஓவியங்கள், கருத்தைக் கவரும் திருவுருவங்கள், இன்னும் நம் கருத்தையும் கவனத்தையும் இறைவன்பால் ஈர்த்துவைப்பதற்கான எத்தனையோ அமைப்புக்கள். இவற்றைப் பார்த்து வணங்கி உள்ளம் உருகி மெய்மறந்து நிற்கும்போது தமிழ் மக்களின் கலைகள் யாவும் நர்த்தனமிடுவனவாகவே தோன்றும். உண்மையில் திருக்கோயில்கள் யாவும் சர்வ கலாசாலைகளேயாம். சர்வகலாசாலைகளான திருக்கோயில்கள் அழகுக்கலைகள் என வழங்கும் அற்புதக் கலைகளான பல நுண்கலைகளை வளர்த்தன. அரிய கலை ஞருக்கும் தொழிலாளருக்கும் ஆதரவளித்தன. கல்வியளித்தன. கடன் வழங்கின. நிதியளித்தன. நீதி வழங்கின.

கட்டடக்கலைவல்ல நூலறி புலவர்கள் அக்காலத்தில் இருந்தார்கள். அவர் கள் சோதிடர், அந்தணர், சிற்பக்கலை அறிஞர் முதலானேரின் உதவியுடன் கோயில்களை அமைத்தனர். ''அறக்களத்தந்தணர் ஆசான் பெருங்கணி சிறப் புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று'' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. மகேந்திரவர்மன் கோயில் கட்டிய சிறப்பினை ''அழிந்துவிடக் கூடிய மண்,

மரம், செங்கல், உலோகம் இவற்றால் கோயிலை அமைக்காமல் என்றும் அழியாத நிலையில் கடவுளர்க்குக் கற்கோயில்களை அமைத்தான்'' என்று கல்வெட்டுக் கூறுகிறது.

பிற்காலச் சோழப் பேரரசர்கள் கட்டிய கோயில்கள் என்றுமுள்ள இறைவனுக்கு என்றுமுள்ள கோயில்களாதல் வேண்டும் என்னும் கருத்தில் உருவானவையாகும். அம்முயற்சியில் பேரரசர், சிற்றரசர்கள், அரசாங்க அலுவலர்கள், அரசமாதேவியார், குடிமக்கள் ஆகிய அனைவரும் ஈடுபட்டிருந்தனர் என்று கல்வெட்டுக் கூறுகிறது.

திருக்கோயிலில் திருச்சுற்று மாளிகைகளும் கட்டப் பெற்றன. அவற்றில் சரஸ்வதி பண்டாரம் என்னும் நூல் நிலையமும், நடன மண்டபம், நாடக மண்டபம், இலக்கண மண்டபம் திருமுறை மண்டபம், முதலியனவும் இருந்தன. அக்காலத்தில் கோயில் விமானங்கள் சில இருநூறடி உயரமானவையாயும் இருந்தன.

பிற்காலத்தில் விமானங்களைவிட உயரமான கோபுரங்கள் கட்டப் பெற்றன. சோழநாட்டுத் திருகோபுரங்கள் ஸ்ரீ அரங்கநாதர் ஆலய கோபுரம், திருவண்ணாமலைக் கோபுரம், மதுரை மீனாட்சியம்மன் கோபுரம், இராமேஸ்வரக் கோபுரம் உயரமானவை, அழகானவை, அற்புதமானவை, அவை எழுநிலை மாடம், ஒன்பதுநிலை மாடம், பதினொருநிலை மாடம் கொண்டவை. அவற்றில் கதைகளை விளக்கும் உருவச் சிற்பங்கள் நிறையவுள்ளன.

தமிழர் அமைத்த கோயில்களில், முக்கியமாகக் கோபுரங்களில் இந்திய இயல்பின் பூரணத்துவத்தையும் ஒப்பற்ற உன்னதப் பெருமையையும் காண முடிகிறது. படிப்படியாகப் பத்தர்களின் பார்வையையும் கவனத்தையும் சிந்தனையையும் இப்பூவுலகத்திலிருந்து மேலுலகத்தக்கு இட்டுச் செல்கின்றன. ஆழ்ந்து அகன்று ஒடுங்கி உயர்ந்த கோபுரங்களில் ஒரு தனித்தன்மையும் தத்துவமும் தங்கித் தவழுகின்றது. அது தமிழரின் தனிப்பெரும் மாட்சியாகும்.

தமிழர் கட்டிய கோயில்களுக்கு வைகாநசாகமம், ஈசானசிவகுருதேவபத்ததி, மயமதம், காரணாகமம் முதலான நூல்கள் ஆதாரமாயுள்ளன. கோயில்களின் வகைகள் ஜாதி விமானம், ஜாதீசா விமானம் என வகுக்கப்பட்டுள்ளன. ஜாதி விமான வகையில் சிவன் கோயில்கள், விஷ்ணு கோயில்கள் இடம் பெறுகின்றன.

தமிழகக் கோயில்கள் நாகரம், திராவிடம், வேஸரம் ஆகிய மூவகைப் பாணிகளில் உள்ளன என்பர். விஜய நகர மன்னர் காலத்துக் கோயிலமைப்பு முறை வியக்கத்தக்க அளவில் அமைந்திருந்தது. மிகப்பெரிய மண்டபங்களையும் கோபுரங்களையும் அவர்கள் அமைத்தார்கள். உற்சவ மண்டபங்கள், கல்யாண மண்டபங்கள் அவர்கள் காலத்துச் சிறப்பான அம்சங்களிற் சில. பதினொரு அடுக்குகளைக் கொண்ட ராஜ கோபுரங்கள் பல இவர்கள் காலத்தவை.

பிற்காலத்தில் பிரபலிக்கமுற்றிருந்த நாயக்க மன்னர்களும் பெரிய கோபுரங்களைக் கட்டினார்கள். சிற்பங்கள் மலிந்த பெரிய தூண்களின் மேல் மண்டபங்களை அழகாக அமைத்தார்கள். பிராகாரங்களைப் பெரிய கருங்கற்பறையால் மூடிக் கட்டிய அமைப்பும் இவர்கள் காலத்ததாகும். இராமேஸ்வரத்துப் பெரிய பிராகாரம் உலகப் புகழ் பெற்றதொன்று.

தென்னகத்தில் இயற்கையின் சூழ்நிலையிலும், வடக்கில் வேள்வித் தீயின் மூலமும் நடைபெற்ற இறைவழிபாடு நாளடைவில் நதிக்கரையிலும் மரச்

சோலையிலும் நடைபெறலாயிற்று. வழிபாடு நடை பெற்ற மரங்களே நாளடை வில் தல விருட்சங்களாயின. ஆகமங்களை அடிப்படையாகக் கொண்டு ஆலயங் கள் எழுந்தன.

ஆலயங்களை மையமாகக் கொண்டு ஊர்கள் உருவாயின. கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்றும் ஆலயந் தொழுவது சாலவு நன்று என்றும் கோட்பாடுகள் எழுந்தன. ஆலயங்கள் மானுடயாக்கையின் புறச் சின்னங்களாயின. உடலிலும் உலகிலும் உள்ள தத்துவத்தை விளக்குவதற்கு ஆலயங்கள் உதவியாயின. ஆலயங்களை நமது மனம் போனவாறெல்லாம் அமைத்தலாகாது என்பதற்காகவே ஆகமங்கள் விதி முறைகளைக் கூறுகின்றன.

ஆலயத்துக்குப் பிராகாரம் அமைந்த பின் அதற்கு ஒரு பெரிய வாயில் அமைகிறது. அந்த வாயில் கோபுர வாயில் எனப் பெயர் பெறுகிறது. அதற் குக் காரணம் அங்கே ஒரு பெரிய கோபுரம் இருப்பதாகும். கோபுரம் மிகவும் உயர்ந்ததாகும். வெகுதூரத்துக் கப்பால் போகிறவர்களும் கோயிலமைந்த இடத்தைக் கண்டறிவதற்குக் கோபுரம் நிலைக்களனாய் இருக்கிறது. ஊர்ப் புறத்தில் உள்ளவருக்கும் ஆலயத்தை நினைவு படுத்திக் கொண்டிருப்பது கோபுரமேயாம்.

கோபுரத்தில் சித்திரிக்கப் பெற்றிருப்பனயாவும் படைப்புக் கிரமங்களும் படைப்பின் விநோதங்களுமேயாம். படிப்பறிவில்லாதவர்களுக்குப் புராணேதி காசக்கதைகளை விளக்குவதும் கோபுரமேயாம். அன்றி வாழ்க்கையின் கோட் பாட்டையும் குறிக்கோளையும் துலாம்பரமாக விளக்குவதும் கோபுரமேயாம்.

கோபுரம் ஒன்றுக்கு மேற்பட்ட பல அடுக்குகளைக் கொண்டது. அது மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என்னும் ஒற்றைப் படை எண்ணில் அமைந்திருக்கும். இங்ஙனம் அமைவதற்கும் ஆகமங்கள் விளக்கங்கூறுகின்றன. ஒவ்வொரு அடுக்கிலும் ஒவ்வொரு வாயில் அமைந்திருக்கும். மூன்றடுக்கு வாயிலாயின் அவை சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் மூன்று அவஸ்தை களைக் குறிக்கும். ஐந்தடுக்காயின் மெய், வாய், கண், மூக்கு செவி என்பன வாதிய துவக்கு, சிங்குவை, சட்சு, ஆக்கிராணம், சுரோத்தம் ஆகிய பொறிகளைக் குறிக்கும். ஏழு வாயிலாயின் இவற்றோடு மனம், புத்தி என்னும் இரு தத்து வங்களும் இடம் பெறும். ஒன்பது வாயிலாயின் இன்னும் சித்தம், அகங்காரம் இடம் பெறும். இவ்வாறு எம்முடைய அமைப்பில் உள்ள வெவ்வேறு தத்துவங் கள் கோபுர வாயில்களில் விளக்கம் பெறும்.

எமக்கு எத்தனை கருவிகரணங்கள் இருந்தாலும் மனம் என்னும் கரணம் தான் இறைவனை நாடுகிறது. மனம் எனும் தோணி பற்றி என்றும், சிந்தனை செய்ய மனம் அமைத்தேன் என்றும், கடிமனம் அடிமையாக என்றும் பெரி யோர் பாடியுள்ளனர். மனத்தை உள்முகமாக ஒடுக்கிக் கொண்டு இறைவனி டம் புகுதல் வேண்டும் என்பதைக் குறிப்பதற்குக் கோபுரத்தில் உள்ள பெரு வாயில் ஒன்று தான் பயன்படுகிறது.

உள்ளே புகுந்ததும் பலிபீடத்துக்கு இப்பால் வீழ்ந்து வணங்குதல் முறை. இங்ஙனம் வீழ்ந்து வணங்கும் போது பலிபீடத்தில் எண்ண அலைகளைப் பலி யிட்டு விடுதல் வேண்டும். இறைவன் மீது கொண்ட ஒரே எண்ணம் மாத்திரம் நிலைத்தல் வேண்டும்.

இனி எம்முன்னோர் ஆலயங்களை மையமாகக் கொண்டும், பக்தியை அடிப் படையாகக் கொண்டும். உடம்பையும் உள்ளத்தையும் சுத்திகரிப் பதை நோக்க மாகக் கொண்டும் விரதங்கள், பண்டிகைகள் விழாக்களைக் கண்டார்கள். ஆண்டு முழுவதுமே நம் நாட்டில் விரதங்களும் விழாக்களும் பண்டிகைகளும் நிறைந் துள்ளன. எந்த நாளையும் நல்ல நாளாகக் கொள்ளும் சித்த சுத்தியையும் விரதங்கள் விழாக்கள் தந்தன. தனிப்பட்டவரும் குடும்பத்தில் உள்ளவரும் ஊரவரும் சமூகத்தவரும் அருட்டித்துக் கொண்டாடி வேற்றுமையில் ஒற்றுமை காண்பதற்கு இவ்வனுட்டானங்கள் வழிவகுத்தன. இவையாவும் கடவுள் வழி பாட்டையே லட்சியமாகக் கொண்டவையாகும். விரதங்களால் உள்ளமும் உடம்பும் வலுப் பெற்றுற் போலப் பண்டிகைகளால் பண்பும் கலாச்சாரமும் வளர்ந்தன. மக்கள் ஒன்றுகக் கூடிப் பழகுவதற்கு விழாக்கள் போன்ற அமைப்பு எந்த உலகத்திலும் காணமுடியாததாகும் விழாக் கோலம் பூண்ட ஊரில் கலைக் கோலம் துலங்குவதை இன்றும் காணலாம். பால் மணம் மாருச் சின்னஞ் சிறு மியர் மாலை புனைவதும் கோலம் அமைப்பதும் வேறெந்த நாட்டு நாகரிகத்தி லும் காணமுடியாத ஓர் தனித்துவம் தமிழரிடையே நிலை பெற்றுவருவதொன்று கும். எனவே தான் எமது பண்பாட்டில் இன்றளவும் சீலம், கல்வி, கலையறிவு, கருத்து நலம், நல்லுணர்ச்சி தாளாண்மை முதலியன நிலை பெற்று வருகின்றன. எனலாம்.

நம்முன்னோர் காட்டிய நெறி அநாதியானது. பாரத நாட்டில் உண்டானது. பகுத்தறிவுக்கு ஒத்தது. பக்திக்குரியது. பண்பாட்டை வளர்ப்பது. வாழ்வை உயர்த்துவது. வாழ்வுக்கு அடிப்படையானது. வாழ்வுக்கு வழிகாட்டுவது. ஆத் மிக ஞானந்தருவது. பிறப்பின் பயனை அடையச் செய்வது.

எங்கள் நெறி ஆசாரம் அனுட்டானம் நிறைந்தது. இறுதியில் பேசா அநு பூதிக்கு இட்டுச் செல்வது. நல்லவற்றை அணைத்துக் கொள்வது நாடொப்பன செய்வது. நாகரிகங்களில் மேலானது. நரரைச் சுரர்களாக்குவது. நாமிருக்கும் இடத்தைச் சுவர்க்கமாக்குவது நாயன்மாரும் ஆழ்வார்களும் குரவர்களும் ஆசாரியர்களும் வாழ்ந்து காட்டியது. எவரையும் உயர் நிலை அடையச் செய்வது. வேற்றுமையில்- ஒற்றுமையைக் காட்டுவது.

இன்னும் சொல்லப் போனுல் அறிவுத்துறைகளை உள்ளுணர்வில் அடங்கச் செய்வது அநுபவமே பெரிய ஞானம் என்பது அந்த அநுபவம் வைதிகமானது வீறுடையது. அந்தவைதிக வீறு தர்மத்தில் ஆரம்பித்து நீதியில் முடிவது. நூல்கள் யாவும் தர்மத்தை அறியத் தூண்டி நீதியை விசாரிக்க வைப்பன. நியாயிப்பதெல்லாம் நீதியை அடைவதற்காகவேயாம். கோயில்கள் தோறும் கோபுரமுயர்க.

கம்பமதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமரும் செல்வமும் மிவிரசும் யான்வேண்டேன்
எம்பெருமாளீசனெழில் வேங்கடமலைமேல்
தம்பமாய் நிற்கும் தவமுடையேனுவேனே.



ஸ்ரீவாமன அவதாரம்



ஸ்ரீ நரசிம்மஅவதாரம், கருடாழ்வார், விநாயகர்.



கிஸ்கிந்தையில் அநுமன் இராமனையும் இலக்குவனையும் கண்டு வணங்கி
சுக்கிரீவன அங்கதன் முதலியவரை அறிமுகம செய்தல்.

ஓம் ஜெய ஸ்ரீ

ஓம் ஸ்ரீதேவி பூதேவி லக்ஷ்மிதேவி சமேத ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பரப்ரஹ்மனே நம:

# ஸ்ரீ வண்ணைப் பெருமாள் பத்து

புன்னாகவராளி — ஆதி

## பல்லவி

திருப்பதி வாழ் வெங்கடேசா — உன்
திருமுகம் கண்டேன் அன்புநேசா

## அனுபல்லவி

பெரும் புகழ் தந்திடும் பொன் மனமே
அருள்தனை ஆற்றிடும் ஆதவனே
மருவி விளையாடும் மாயவனே — என்னில்
பருக வந்திடும் பாலகனே.

## சரணம்

வருவாயோ மாதவா
பருகாயோ பாலகா
திருப்பதியில் காண்பதே
திருவண்ணில் காண்பரே.

## ஸ்தல விருட்சம்

வான நோக்கி எழும் கோபுரத்தே
வானரங்கள்
தான்நோக்கி தங்கள் மலைநோக்கி
தாவரங்கள் *
கான்நோக்கி களிக்கும் காட்சியின்
வர்ணங்கள்
நான்நோக்கி அனுமனைக் கண்டுகொண்டேன்
நாராயண வாசலிலே.

## ஸ்ரீ ரங்கநாதர்

வாசலிலே தேரைக்கண்டேன் தேவாதி
தேவரைக் கண்டேன்
பாசபந்தங்களறுக்கும் பிரானை பருந்தினில்
பறந்து வருவானை, வினை
நாசகாரனை நான்முகன் படைத்தானை
பாண்டவர்க்காய் தூதுசென்றானை விசு
வாசகாரனை ஸ்ரீ வேங்கடேச வரதராஜனை
வண்ணையில் கண்டேனே.

* பலா, அரசு, மகோகனி, மருது

## ஸ்ரீ வேணுகோபாலர்

கண்டேன் காலில் தளையுடையானை
கண்ண நாம முடையானை
புண்டரீகத் தாளனை பூமகள் மணாளனை
புட்பக வாசனை
தண்டுவளர் தோளனை லக்ஷ்மி தாமனை
கோசலை குமரனை
கொண்டல்மணி கிருஷ்ணனை கோபியர்
கோவிந்தன் உருவினிலே.

## ஸ்ரீ இராமர்

உருவினிலே உயர்ந்தோனாய் உயர்கிரிக்கும்
உயர்ந்தவனாய் கற்பக
தருவிலும் தருமனாய் தபசியர் தபோதியாய்
மங்கள மூலனாய்
மருவிய சீதைமன்மதனாய் அயோத்தி
அரசனாய்
அசரீரி வாயனாய்
திருமுகமலரும் திண்தோள் தண்டுடையானை
நான் அடைவேனே.

## ஸ்ரீ ஆண்டாள்

அடைவேனென்று ஆண்டாள் பூண்ட
அன்புடையான் பல
முடையேதந்தான் முதலைவிட்டது போல்
விடுவித்தான் துயர்
அடையேன் இனி ஆள்வார்போல்
பாசுரங்களால் நல
மடைவேன் நாராயணன் பால்
பூண்டதனால் உயர்ந்தேனே!

## ஸ்ரீ மகாலக்ஷ்மி

உயர்ந்தேனென இறுமாப்பு கொள்ளேன்
    உன்னுருவில் யான்
அயர்ந்தேன் அரியாசன அமர்ந்தேன்
    அவள் மலர்ந்தே
இயைந்தாள் இதயங் கொண்டாள்
    இளையவளாகி இரங்கி
நேயம் கொண்டாள் வேங்கடவா உன்தன்
    வேக திருவுளத்தால்.

## ஸ்ரீ சந்தனகோபாலர்

உள்ளத்தால் உயர்ந்தோன் உயர்
    அரிவாகனமாய்
கள்ளச் சடலம் வளர்க்கின்றேன்
    கனிவாக நாபடிய
மெள்ளப் பாடுகின்றேன் மெலி
    குயிலைப்போல் குரலை
துள்ளத் தூண்டுவாய் தூய
    வண்ணை தூதுவனே.

## கருடாள்வார்

தூதுவனுக கருடனை முன்னே
    நிமிர்த்த பிரான் தன்
ஆதாள பாதாளம் பன்றியாய்ச்
    சென்ற ஆதவனே
வேதாகம வேகம் வேங்கடனே
    வென்றுவர என்னுவில்
ஆதாரமாக வரவேண்டும் பிரமனை
    ஈன்ற பெருமாளே.

## மண்ணையுண்ட மூல மூர்த்தி

பெருமாளே உனதருளாலே உயர்ந்தோம்
    வடிவு கொண்டோம்
கருடன் அனுமன் பன்றிகாளை ஊர்தி
    கொண்டாய் உலகினையே
திருவாயில் காட்டினுய் திருமகளைக்
    கொண்டாய் திரவியதாரீ
திருலீலைகள் செய்யப் பணியாய்
    திருவேங்கட வர்ணனே.

## வர்ணக்கோபுரம்

வர்ணக் கோபுர வாசலிலே விளைவிட்டு
    தென்மேல் நோக்கி
வருபவரின் எண்ணம் பலிக்க எண்ணிடும்
    வளர் வடிவழகியை
மருவிய மாயவனை வண்ணை ஸ்ரீ வேங்கடேச
    வரதராஜ மன்னனை
கற்பூர ஜோதியாய்க் காமாக்ஷிசோதரு கடா
    க்ஷனுய் காண்பாரே.

எல்லாம் வல்ல வையகசித்தன்
    ஸ்ரீலக்ஷ்மிநாராயணசுவாமிஜீ


எல்லாம் வல்ல வையகசித்தன்
    ஸ்ரீ லக்ஷ்மி நாராயண சுவாமிஜீ

---

பச்சை மாமலை போல்மேனி பவளவாய் கமலச்செங்
கண் அச்சுதா ! அமரரேறே ! ஆயர்தம் கொழுந்தேயென்றும்
இச் சபை தவிர யான் போயிந்திரலோகமாளும்
அச்சபைபெறினும் வேண்டேனரங்கமாநகருளானே !



கூனியின துர்போதனையை ஏற்காது கைகேயி குழந்தை
ஸ்ரீ இராமனிடம் அன்புசெலுத்துதல்.



ஸ்ரீ கிருஷ்ணன் பகாசுரனை வதஞ்செய்தமை



வேயங்குழல் ஊதும் மாயக்கண்ணன்



கோதண்டம் கையில் ஏந்திய ஸ்ரீராமன்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை

# நாராயணு என்னும் நாமம்

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

''ஞானத்தால் நன்குணர்ந்து
நாரணன் தன் நாமங்கள்
தானத்தால் மற்று அவன் பேர்
சாற்றினுல் வானத்து
அணி அமரர் ஆக்குவிக்கும்''

திருமாலை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணவம். தொன்று தொட்டுப் பல உயர்ந்த தத்துவங்களை தன்னுள் அடக்கி மிளிரும் இச்சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் ஆழ்வார்களாவர். இவர்களின் அருட்பாசுரங்களிலே திருமாலின் பன்னிரு திருப்பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன: கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விட்டுணு, மதுசூதனன், திருவிக்கிரமன், வாமனன், சீதரன், இருதடிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்பனவாம்.

இவற்றுள் நாராயணன் என்ற பெயரைக்கொண்ட எட்டெழுத்து மந்திரம் பெரிய திருமந்திரம் என்ற சிறப்பை உடையது. நாராயணன் என்பது நாரம் அயனன் என்ற இரண்டு சொற்களால் ஆனது. இதற்கு இரண்டு வகையாகப் பொருள் கூறுவர். முதலாவது, அறிவில்லாத பொருள்களின் கூட்டத்துக்கு இடமாக உடையவன் என்பது. இரண்டாவது, அழிவில்லாத பொருள்களை இடமாக உடையவன் என்பதாகும் இவை முறையே வியாபகத்துவம். அந்தர்யாமித்துவம் எனப்படும். இக்கருத்தை ஆழ்வார் பாசுரம் மிகச் சிறப்பாகக் காட்டுகின்றது.

''அறிகிலேன் தன்னுள்
அனைத்துலகும் நிற்க''

நெறிமையால் தானும் அவற்றுள் நிற்கும் பிரான் என்பது திருவாய் மொழி. நற்றிணை என்ற நூலில் இயன்ற எல்லாம் பயின்று அகத்தடக்கிய வேதமுதல்வன் என்று திருமாலைக் குறிப்பிட்டுள்ளார். தன்னிடத்திருந்து உண்டான நூல்வலையில் சிலந்திப்பூச்சி குடியிருப்பது போன்று தன்னிடத்தில் இருந்து உண்டான பிரபஞ்சம் முழுவதிலும் பரமாத்மா உறைந்திருக்கிறுன். எனவே அவன் நாராயணன் எனப் போற்றப்படுகின்றுன். அவனுடைய வியாபகத்தை பஞ்ச பூதங்களோடு இணைத்து ஆழவார்கள் காட்டியுள்ளனர். பாரிடை ஐந்தாயும் நீரிடை நான்காயும் தீயிடை மூன்றுயும் காற்றிடை இரண்டாயும் ஆகாயத்திடை ஒன்றுயும் அமைந்து விளங்கும் தன்மை விளக்கப்படுகிறது.

''பூவிவாய ஐந்துமாய்
புணற்கண் நின்ற நான்குமாய்
தீ நிலாய மூன்றுமாய்
சிறந்த காலிரண்டுமாய்
மீ நிலாய ஒன்றுமாய்
வேறுவேறு தன்மையாய்
நீ நிலாய வண்ணம்
நின்னை யார் நினைக்க வல்லரே''

''மந்திரம்'' என்பது நினைப்பவனைக் காப்பது. இதனைப் பக்தியோடு ஜெபித்தால் மேலும் மேலும் பலனை அடையலாம். பெருமான் தனது ஒரு கையில் சங்கு வைத்திருக்கிறுன். அதனை ஊதுமிடத்து உண்டாகும் ஒலி ஓங்காரம். இயற்கையின் இயக்கச் சத்தமே ஓங்காரமாகும். ஓசைதான் உலகில் உள்ள அனைத்திற்கும் முதலாகிறது. ''சொல்'' என்னும் வித்திலிருந்து பொருள் உண்டாவதுபோல் மந்திரத்தில் இருந்து வடிவம் பிறக்கிறது. வைணவ சமயத்தில் வீடு பேற்றை அடைய விரும்புகின்றவன் திருமந்திரம், துவயம், சரம சுலோகம் ஆகிய மூன்று மறைமொழிகளைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். அவற்றுள் முதலாவது திருமந்திரம் என்பதாம். ''ஓம்

நம நாராயணுய'' என்ற மூன்று பதங்களில் ஓம் என்ற சொல்லின் பொருளேயே ''நம நாராயணுய'' என்ற இரு சொற் களும் விளக்குகின்றன. இதுவே சகல வேதங்களின் சாரமாக இருப்பதால் அவை பயபக்தியோடு குருசீட முறையில் அணித் தாக இருந்து உபதேசிக்கப்படவேண்டியது என்பர். அதனுலேயே மறைமொழிகள் என்றும் பெயர் பெற்றது. இதனை ஓயாது ஜெபிப்பதால் நாராயணனை உள்ளத்திலே காணவும் அவனை அடைந்து சரண்புகவும் முடிகிறது. அவனைத் தெரியாது. ஆனுல் அவன் நாமத்தைத்தெரியும். தெரிந்ததை உறுதியாகப் பிடித்துக்கொண்டால் தெரியா ததை அடையலாம். நாராயண மந்திரத்தின் பெருமையை திருமங்கையாழ்வார் அழகா கக்காட்டுகிருர்.

''வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர் இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மோ
டவர் தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணு வென்னும் நாமம்.

இம் மந்திரம் தரும் பயனை எடுத்துக் காட்டும் பாசுரமும் மிகச்சிறப்பானது இதனை நாம் ஜெபிப்பதனுல் குறிப்பிட்ட பலன்கள் தப்பாமல் கிடைக்கும் என்பது உறுதி.

''குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள் விசும்பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்ற தாயினும் ஆயினசெய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்
டேன்

நாராயணு வென்னும் நாமமே''

ஆண்டாள் பெருமாட்டியும் திருப்பா வையின் முதற்பாடலிலேயே ''நாராயணனே நமக்கே புறை தருவான்'' என்று பாடியரு ளுகிருர். அனைத்தும் நாராயண சொருப மாகக் காண்பவர்கள் உள்ளத்திலே அவன் பள்ளிகொள்கிருன். இதனுல் அடியார்களின் காயமே கோயிலாகி விடுகிறது. இத்தகைய பரிசுத்த நிலையில் வாக்குச் சுத்தம் நாம ஜெபத்தாலும் மனச்சுத்தம் தியான நிலை யாலும் ஏற்படுகிறது. இதுவே சமயநெறி காட்டும் பெருநிலை. இந்தநிலை வந்தடைய ''ஓம் நாராயணுய நம'' என்பதை ஓராயி ரம் தரம் ஜெபித்து உய்தியடைதலன்றே பக்தர்கள் கடனுகும்.

நெடிய மாயவனே போற்றி
நிலமகள் கொழுந போற்றி
அடியினுல் உலகமெல்லாம்
அளந்துமல்லால் அந்தப்
படியெலா முண்டு காத்த பண்ணவ
போற்றி போற்றி
கொடிய காளிங்க நிர்த்த குஞ்சித
பாத போற்றி

நெடியயாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே !
நெடியானே ! வேங்கடவா ! நின்கோயிலின் வாயில்
அடியாரும், வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே !

ஸ்ரீ ராமஜெயம்

# மேலும் மூன்று தம்பியர்

திரு. க. பழநிச்சாமி அவர்கள்
ஸ்ரீ வே. வ. பெருமாள் தேவஸ்தானம் தருமகர்த்தா.

தசரதகுமாரன் ஆகிய ஸ்ரீராமன் உடன் பிறந்த தம்பியர் மூவரைப் பெற்றிருந்த தோடு அமைதி பெறவில்லை அயோத்தியின் நின்று இலங்கைவரை சென்று மீழ்வதற்குள் மேலும் மூன்று தம்பியரை விரும்பி ஏற்றுக்கொள்கின்றான். இராமன் சகோதர ராக ஏற்றுக்கொண்ட மூவரும் மூன்று துருவங்களில் உள்ளவர்கள். கல்வி வாசனை யே அற்றவன் குகன், உம்பரினும் சற்றே உயர்ந்த ஞானத்தையுடையவன் விபீடணன் இவ்விருவருக்கும் இடைப்பட்டவனாகக் காட் சிதருகிறான் சுக்கிரீவன். இறைவனிடம் அடிமைபூண்ட உயிர்கள் அனைத்தும் இந்த மூன்று வகைகளில் அடங்கும், ஆகையினால் பரம்பொருளாகிய இராமன் இம்மூன்றுவகை யினரையும் ஏற்றுக்கொள்கின்றான். இம் மூன்று வகையான மனநிலையையும் விரித் துக் கூறுவதற்காகவே கவிச்சக்கரவர்த்தி கம்பன் இம்மூன்று பாத்திரங்களையும் படைத்திருக்கின்றான். முதலாவது கூறப்படு வது தூய அன்பு. அன்பை இரண்டுவகை யாகப் பயன்படுத்தலாம் அவை சாதனை அன்பு, சாத்திய அன்பு என்று கொள்ளப் படுகின்றது, சாத்திய அன்பு பூண்டவரின் உடல், பொருள், ஆவி அனைத்தும் அன்பு வடிவானதாகும். இதற்கு எடுத்துச் சான் றாக உளன் குகனே யாவன். குகன் கல்வியறிவு சிறிதும் அற்றவன் ஞானிகள் யோகிகள் உடன் பழகாதவன், பிறவி நோய் என்ற ஒன்று இருப்பதாக அறியா தவன். ஆனால் ஸ்ரீராமனைக் காணவந்துள்ள முனிவர் கூட்டமோ இவனைத் தரிசிப்பதன் மூலம் பிறவி நோயைப் போக்கிக்கொள்ள லாம் என்னும் கருத்துடனே வந்துள்ளார் கள். ஆனால் குகனோ கலயத்தில் தேனையும் மீனையும் கொண்டு இராமனைக் கண்டு அன்பு செய்ய வந்துள்ளானே தவிர வேறு எதனையும் எதிர்பார்த்து வந்துள்ளான் அல் லன். ஆகையினால்தான் இளையபெருமாள் "அவன் வந்துள்ளான்" என்று ஸ்ரீராமனி டம் சென்று புகல்கின்றான் மேலும் இலக் குமன் குகனைப்பற்றி கூறுகின்றான் "உள்ள தூயவன் தாயினும் நல்லவன்" என்கிறான் உள்ளே சென்ற குகன் இராமனைக் காண் கின்றான், இராமன் இவனை இருக்க என்று பணித்தும் குகன் அமரவில்லை. இவ்வித இயல்பையொத்த குகன் இராமன் மாட்டு வைத்த அன்பு சிறிதாகத் தோன்றிப் பழகப்பழக முதிர்ந்த அன்பு அன்று, தோன்றும்பொழுதே முழுதாகத் தோன்றிய அன்பாகும் இது. குகன் இந்த அன்பையே பயனாகக் கொண்டவன் இதனாலேயே இரா கவன் இவனை ஏற்றுக் கொண்டான்.

இதற்கு மாறுபட்ட சூழ்நிலையில் ஞான த்தால் இராகவன் பரம்பொருள்தான் என்று அறிந்து அவனிடம் ஆட்பட்டவன் விபீட ணன், பெருங் கல்வியாளனும் ஞனியுமாகிய இவன் அநுமன் வாயிலாக் இராமனைப் பற்றி அறிய நேர்ந்தது. இனி கவிஞன் வாயிலாக் விபீடணனின் வளர்ச்சியைக் காண்போம்.

"அன்புறக் காரணம் அறியகிற்றிலேன்;
என்புறக்குளிரும்; நெஞ்சுஉருகிமேல் அவன்"
"எல்லையில் பெருங்குணத்து இராமன்
தாளிணை
புல்லுதும்; புல்லி இப்பிறவி போக்கும்"

இவ்விரண்டு செய்யுள்களும் விபீடண னின் மனநிலையையும் குறிக்கோளையும் நன்கு எடுத்தியம்புகின்றன. இராமன் பெயரை விபீடணன் கேட்டமாத்திரத் தேயே என்புகள் குளிருகின்றனவாம் நெஞ்சு உருகுகின்றதாம் இவை இறையன்பு பூண்டார் மாட்டு உண்டாகும் மெய்ப்பாடு

கள் ஆகும். இவ்வன்பையும், அதன் விளைவாகிய மெய்ப்பாடுகளையும் விபீடணன் கருவியாகப் பயன்படுத்துகிறான். இத்தகைய உருக்கத்தை ஒருவன் பெயர் உண்டாக்க வல்லதுவெனில் அவன் பிறவியை அகற்றக் கூடியவனாகத்தான் இருக்கவேண்டும் என்று விபீடணன் தன் ஞானத்தால் துணிவு கொள்கிறான். இராமன்மாட்டு விபீடணன் கொண்ட அன்பு அவனுடைய பிறவியைப் போக்கிக் கொள்ளவும் அப்பரம் பொருளை ஓரளவு அறிந்து கொள்ளவும் பயன்பட்டதே தவிர அந்த அன்பைக் குகனைப் போலச் சாத்தியமாக கொள்ளவில்லை என்பது தெளிவு. இதனின்று நாம் அறிவது யாதெனில் குகன் பக்தியை சாதனமாகவும் கொண்டனர். ஆனால் இருவரையும் அண்ணல்தன் மாட்டு ஏற்றுக் கொண்ட தன்மை இவ்விருவழிகளும் ஈசனுக்குகந்தவை என்பது புலனாகின்றது.


எனவே இவ்விருவழிகளும் சாதாரண மனிதர்களால் எளிதில் ஏற்றுக்கொள்ளக் கூடியன அல்ல. ஆனால் இதற்காகச் சாதாரண மனிதன் இறையருளை நாட முடியாது என்பது கருத்தல்ல. இதற்கும் ஒரு வழியைப் புலப்படுத்துகின்றான் கவிஞன் அஃது இதற்கெனப் படைக்கப்பட்டுள்ள பாத்திரம் சுக்கிரீவன் ஆவான் சாதாரண மனிதருடைய நேர்பிரதிநிதியாகத் தோன்றும் சுக்கிரீவன் கல்வியறிவுடையவன், அநுமனே இவனது உற்ற துணைவனும், அமைச்சனுமாகவுளான் இவ் அநுமானே சுக்கிரீவனை இராகவனிடம் அழைத்துச் செல்கின்றான். இரகவனைப் பார்த்த மாத்திரத்தே சுக்கிரீவனுக்கு ஏற்பட்ட மனோநிலையினை கம்பன் விளக்கும் நிலையினை இனி ஆராய்வோம். நான்முகன் படைத்த ஞாலம் அனைத்தும், செய்த தவமெல்லாம் திரண்டு இவ்விரு வீரராகிய இராம இலக்குவன் வடிவில் வந்துற்றதோ என்று முதலில் நினைத்தான், பின்பு ஆராய்ந்து கடவுளர் அனைவரும் மானுட வடிவுபெற்று இவ்விருவர் உருவில் வந்துற்றனர் போலும் என்று நினைத்து இராமனை அணுகிப் பேசுகின்றான "ஆருயிர் துறக்கலாற்றேன்; சரண்புகுந்தேன், எனைத் தாங்குதல் தருமமென்றான்;" குகனும், விபீடணனும் இவ்வாறு இராமனிடம் பரிந்தும் இரந்தும் நம் துன்பம் துடைக்க வேண்டும் என்று வேண்டினரல்லர். ஆனால் சுக்கிரீவன் தன் துன்பத்தைப் போக்க வேண்டுமென்று ஸ்ரீராகவனிடம் சரண்புகுகின்றான். ஞானியாகிய விபீடணன் இராமனிடம் சரண்புகுவதற்கும், கர்மியாகிய சுக்கிரீவன் சரண்புகுவதற்கும் வேறுபாடு நிபரம் ஏற்பட்டுள்ளது சுக்கிரீவன் சரண்புகுந்த தன்மை சர்வபரித்தியாகம் அன்று தன் துன்பம் நீங்கவேண்டும் என்னும் குறிக்கோளின் வயப்பட்டு சரண்புகுந்தானே தவிர்ந்து விபீடணனைப்போல் ஞானத்தால் இராமன் பரம்பொருளை உணர்ந்து சரண் புகுந்தான் அல்லன். ஆனால் சுக்கிரீவன் சாதாரண மனித இயல்பு படைத்தவன் ஆகலில் வாலியைக் கொல்லக் கூடியவன் இராமம் ஒருவனே என்று அறிந்து கொண்டதால் மட்டுமே அவன் அப்பொழுது இராமனிடம் சரண்புகுந்தான் இந்தவன்பு முழுத்தன்மையதன்று வாலி இறந்த பின்பு சுக்கிரீவன் வாழ்க்கையை அனுபவிக்கத் தொடங்கினான். இராமனுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மறந்தான் இறைவனை மறந்து வேட்கையில் ஈடுபட்டான் இவ்வளவு இழிநிலையை அடைந்தபோழ்திலும் சுக்கிரீவன் பின்பு தன் நிலைஉணர்ந்து இராகவனை அடைந்து தன் பிழைதனைப் பொறுத்தருளுமாறு வேண்டிக்கொண்டபொழுது ஜானகி மணாளன் இவனை மன்னித்து ஏற்றுக்கொள்கின்றான். இதே சுக்கிரீவன் இராம - இராவணப் போரின்போது தன் உயிரையும் இராமனுக்கு உதவ முன்வரும் தன்மையைக் காண்கின்றோம். இறுதியில் இவனின் செயல்கள் மூலமாக இராகவனின் தம்பியாகும் தகுதியைப் பெறுகின்றான். சராசரி மனிதனின் குற்றங்கள் மலையளவுள்ளதாயினும் அவை மன்னிக்கப்பட்டுத் திருவருளின் பாத்திரமாகலாம் என்பதற்கு சுக்கிரீவனே சிறந்த எடுத்துக்காட்டாவான்.

மூன்று தம்பியரை இராமன் வனவாசத்தில் ஏற்றுக்கொண்டாலும் மூவரும் மூவேறுபட்ட பண்பினை உடையவராவர். இறைவன் திருவருளுக்கு எத்தகையவரும் பாத்திரமாக முடியும் என்ற பேருண்மையை விளக்கவே இராகவன் இம் மூவரையும் ஏற்றுக்கொள்கின்றான் அன்பே வடிவான குகன் பக்தி மார்க்கத்தின் பிரதிநிதியாகவும், அறிவே வடிவான விபீடணன் ஞான மார்க்கத்தின் பிரதிநிதியாகவும், சாதாரண மனித இயல்பையுடைய சுக்கிரீவனையும் இறைவன் ஏற்றுக்கொள்கின்றான் இம் மூன்று வழிகளில் எவ்வகையைப் பின்பற்றினும் இறையருள் கிட்டுவது திண்ணமாகும்.

சுபம்



மன்னன் தசரதன் விஸ்வாமித்திர முனிவருடன் ஸ்ரீராமனையும்,
இலக்குவணனையும் வேள்விகாக்க ஆசிர்வதித்து அனுப்பும் காட்சி.



ஸ்ரீராமனுடைய திருப்பாதங்கள் தீண்டப்பெற்று கல்லுருக்கொண்ட
அகலிகை சாபவிமோசனம் பெற்ற காட்சி.



தூக்கிய திருவடிகொண்டு மூவுலகை
அளந்த பெருமாள்.



ஸ்ரீ மகாலெட்சுமிதேவி

# வைணவ ஆழ்வார்கள்

கோ. கிருஷ்ணசாமி

ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தான தர்மகர்த்தா.

கி. பி. இரண்டாம் மூன்றும் நூற்றுண்டுகளில் தமிழகத்தே சமணமும் பௌத்தமும் செல்வாக்குப்பெறத் தொடங்கி சைவத்தையும் வைணவத்தையும் போற்றி சிவனையும் திருமாலையும் போற்றிப் பூஜித்து வந்த தமிழ் மக்கள் பிழையான வழிகளில் சமணர்களால் இட்டுச் செல்லலாயினர். இவ்வேளையில் சைவமும் வைணமும் புத்துயிர்பெற நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றலாயினர். உடலையும் உள்ளத்தையும் வருத்தி காட்டிற்கே சென்று தவம் செய்வதிலும் பார்க்க பக்தி செலுத்தி இறைவனை வழிபடுவது சிறந்த மார்க்கமென விளக்கிக் காட்டினுர்கள். கலையும் பொன்னும் பொருளும் இறைவனுக்கே அர்ப்பணித்து இறைவனை வணங்கி பயனடையும் முறைகளை அச்சான்ருேர்கள் மக்களுக்குக் காட்டினுர்கள். இல்வாழ்க்கையோ அல்லது செய்யும் தொழிலோ இறைவனுக்கு பக்தி செலுத்தி வணங்கி இறைவனை அடைவதற்கு எவ்வகையிலும் தடையாக இராது என்பதை மெய்ப்பித்துக் காட்டினுர்கள். இசையோடு கலந்த அழகிய தமிழில் பாடல்களைப் பாடிக்கொண்டு ஊர் ஊராகச் சென்று கோவில்கள் தோறும் வழிபட்ட முறைகளைக் கண்ட தமிழ் மக்கள் மனத்தில் சமயவாழ்க்கையில் ஒரு புதிய ஒளியைப் பிறப்பித்து தவருன வழிகளில் சென்றவர்களைத் தடுத்து நிறுத்தலாயிற்று.

இச்சான்ருேர்களில் வைணவ நெறி தழைத்தோங்க வந்த பெரியார்கள் ஆழ்வார்கள் என்று சிறப்பாக அழைக்கப்பட்டனர். ஆழ்வார் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் கூறுவர். திருமாலின் கல்யாண குணங்களில் ஈடுபட்டு அழுந்தினவர்கள் - திருமாலின் வடிவழகிலே ஆழ்ந்து போனவர்கள் - மக்கள் இறைவனை மறந்து படும் துன்பத்தைக் கண்டு மனம் பொறுக்காது அத்துன்பத்தில் ஆழ்ந்தவர்கள் ஆகியன. இம்மூன்று பொருள்களும் ஆழ்வார்கள் எத்தகைய வாழ்வு வாழ்ந்தார்கள் என்பதை சிறப்பாக விளங்குகின்றன.

எல்லா உயிர்களுக்குள்ளும் எல்லாப் பொருள்களுக்குள்ளும் உள்ளும் புறமுமாக நீக்கமறத் திருமால் நிறைந்திருப்பதை உணர்ந்து இறைவனைப் பாடிப் பரவிப் பக்தியை வளர்த்த ஆழ்வார்கள் பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமிழிசையாழ்வார் பெரியாழ்வார், நம்மாழ்வார் மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், திருமங்கையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் திருப்பாணுழ்வார், ஸ்ரீ ஆண்டாள் என பன்னிருவராவர்.

இவ்வாழ்வார்கள் இவ்வுலக மக்கள் சமய வாழ்வு வாழ்வதற்கான வழியைக் காட்டவே அவதரித்துள்ளார்கள். எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாகிய திருமாலை அடை

வதற்கு காலம் இடம் சாதி முதலிய எதுவும் குறுக்கே நின்று தடை செய்ய மாட்டாது என்பதை தங்களுடைய வாழ்க்கையின் மூலம் காட்டிச் சென்றுள்ளார்கள். பல காலங்களில் பல இடங்களில் பல சூழல்களில் அவதரித்த இவ்வாழ்வார்கள் பலசாதிகளிலும் அவதரித்துள்ளனர். பெரியாழ்வார், தொண்டரடிப்பொடி ஆழ்வார், மதுரகவியாழ்வார் இவை மூவரும் பிராமண குலத்தவர். திருமங்கையாழ்வார், குலசேகராழ்வார் ஆகிய இருவரும் மன்னர் குலத்தவர்கள் நம்மாழ்வார் திருமழிசையாழ்வார் ஆகிய இருவரும் வேளாளர் குடியில் வந்தவர்கள் திருப்பாணாழ்வார் பாணர் குலத்தவர் இவ்வாறு பல்வேறுசாதிகளில் அவதரித்திருந்தாலும் திருமாலிடம் கொண்ட அன்பும் பக்தியும் இவர்களை ஒன்றுசேர்த்தன.

ஆழ்வார்களுள் மிகச்சிறப்பாக போற்றப்படுபவர் நம்மாழ்வார். இவர் "வைணவ குலபதி" என்று போற்றப்படுகின்றார். அன்றியும் நம்மாழ்வார் திருமாலின் திருவடிகளுக்கு மிக நெருக்கமாக இருந்த காரணத்தால் இன்றும் பெருமானின் பாதுகை "ஸ்ரீ சடகோபம்" என்று இவரது பெயராலேயே வழங்கப்படுகின்றது.

வைணவன் என்ற சொல்லுக்குத் திருமாலின் சம்பந்தம் பெற்றவன் என்பது பொருள். அச்சம்பந்தம் பெறப் பிரபக்தி நெறியே சிறந்ததென வைணவ சமயம் கூறும் இறைவனே என்னை ஆட்டுவிப்பவன். நான் அவனுடைய கருவி தான் என்ற முழுமனத்தோடு ஒருவன் தன்னை இறைவனிடம் ஒப்புவித்துக் கொள்ளுதலே பிரபக்தி நெறி எனப்படும் இதுவே சரணாகதி நெறியாகும். நம்மாழ்வார் இதனை "ஆறு எனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆழ்வார்கள் என்றும் திருமாலையே நினைந்து நினைந்து மனம் உருகி உருகி அன்புப் பெருக்கோடு வழிபட்டனர். அவர்கள் தூய உணர்வுடன் எந்த நேரத்திலும் திருமாலின் நினைவிலேயே ஆழ்ந்து கிடந்து வழிகாட்டியதால் தான் வைணவ நெறி தழைத்தோங்கியது.

சமயவாழ்வில் இறைவனின் திருநாமத்திற்குள்ள சிறப்பிடத்தை நாராயணவென்ற அவனுடைய நாமத்தால்வரும் சிறப்புக்களை திருமங்கையாழ்வார் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு
கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

பிறவி எடுப்பதைத் தவிர்ப்பது சமய நோக்கங்களில் முக்கியமான ஒன்றாக அமைய, மனிதப்பிறவி இறைவனுடைய திருநாமங்களை திரும்பத்திரும்பக் கூறும் வாய்ப்பை அளிப்பதினால் மனிதப் பிறவி வேண்டியது தான் என தொண்டரடிப் பொடியாழ்வார் பாடியுள்ளதாவது.



ஸ்ரீ கண்ணன் கோபிகாஸ்திரீகள் உடன் சேர்ந்து கோலாட்டம் அடித்தல்.



குழந்தைக் கண்ணன், ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான
ஸ்ரீ வரதராஜப்பெருமாள், கூனியாகிய மந்தரை.



ஆலிலையில் துயிலும் குழந்தைக்கண்ணன்



ஆதிமூலமே என்று அழைத்த கஜேந்திரனை முதலை வாயினின்றுமீட்ட காட்சி.

''பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்க மாநகருளானே.

ஆழ்வார்கள் அருள்நெறி இவ்வாறு அழகும் எளிமையும் இனிமையும் நிறைந்து வைணவ நெறிக்கே விளக்கமாக அமைந்துள்ளது ஆழ்வார்களுடைய பாடல்கள் அனைத்தும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்ற பெயருடன் பக்தி இலக்கியமாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. இவர்களுடைய பாடல்கள் வைணவ நெறிக்கு உயிராக அமைந்து போற்றத்தக்க வைணவ நெறியை இயக்கிக் கொண்டிருக்கின்றது என்பது மிகையாகாது.

ஓம் நமோ நாராயணய

---

# வாழ்த்துரை

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் 23-4-28 ஞாயிறன்று இராஜகோபுர மகாகும்பாபிஷேக வைபவம் நடைபெற இருப்பதை அறிந்து மட்டிலா மகிழ்ச்சியடைகிறேன்.

மூலவரைத் தரிசிக்கமுடியா வேளைகளில் வானளாவிய ராஜ கோபுரத்தை தூரத்திலிருந்தே தரிசிப்பதன் மூலம், மூலவரைத் தரிசிக்கும் அதே பேற்றைப் பெறலாம் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாறு இராஜ கோபுரதர்சன மூலமே அரும்பயனை வழங்கக்கூடியது தேவாலயங்கள் மிகமிகச் சிலவே இலங்கையில் உள்ளன. இவ்வரிய பயனை இக்கும்பாபிஷேகத்தின் நாம் எல்லோரும் அடையும் அரும் வாய்ப்பு இத்தேவாலயத்தில் தெய்வத் திருவருளால் உருவாகியுள்ளது.

இத்தேவ கைங்கரியத்துக்கு உதவிய அடியார்களுக்கும் இக் கோபுரத்தை உருவாக்க இடையீடின்றி உழைத்த ஆதீன கர்த்தர்களுக்கும். ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் திருவருள் புரிவாராக.

கா. கைலாசநாதக் குருக்கள்

இந்து நாகரிகத் துறை,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
யாழ்வளாகம்
19-4-1976

ஸ்ரீ ராமஜெயம்

# வண்ணை வேங்கடவனின் எழில்மிகு இராஜகோபுரம்.

– திரு. V. N. C. நாராயணசாமி
செயலாளர் இராஜகோபுரத் திருப்பணிச்சபை.

பண்டைத்தமிழர் இறைவழிபாட்டினை மிகவும் அவசியமெனக் கருதினர். இறை வழிபாடு ஒன்றே மக்களை நல்வழிப்படுத்தும் தன்மையுடையது, ஆன்ம ஈடேற்றத்தைத் தரவல்லது என நம்பினர்; இதற்கு இணங்கத் தமிழ்வேந்தர் இறைவனை மக்கள் இமைப் பொழுதும் மறவாதிருக்க ஆலயங்களின் முன்வாயில்களிலும், மற்றும் வாயில்களிலும் வெளிப்பிரகாரங்களில் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய பகுதிகளில் நெடிதுயர்ந்த கோபுரங்களை அமைத்து ஊரின் நாற்புறத்தேயுள்ள மக்கள் தினந்தோறும் ஸ்தூலலிங்கமாகிய கோபுர தரிசனத்தைப் பெற்றுய்யும் பொருட்டு வழிவகுத்துள்ளனர் இக்காரணங்களாலேயே தமிழ்நாடு எங்கணும் ஆலயங்கள் தோறும் நெடிய கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இற்றைக்குச் சில ஆண்டுகள் முன் தொடங்கி ஈழவளநாட்டின் கண்ணும் பரவலாக இந்து ஆலயங்கள் தோறும் இராஜகோபுரங்கள் நிர்மாணிக்கும் உன்னத திருப்பணிக் கைங்கரியங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இத்திருத்தொண்டின் தொடர்பாகவே யாழ்நகரில் வண்ணையப்பதியில் வீற்றிருக்கும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் திருவருட் கடாட்சத்தினால் ஏழு மாடங்களைக் கொண்ட நெடிதுயர்ந்த இராஜகோபுரம் கண்ணபக்தர்களதும், ஆலய பரிபாலகரதும் பெருமுயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இக் கோபுரத்தின் ஏழு அடுக்குகளிலும் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் தச அவதாரங்களும், ஸ்ரீ கண்ணனின் லீலாவினோதங்களின் சில பகுதிகளும், ஸ்ரீராமபிரானின் இராமாயண வரலாறுகளும், விஷ்னு பக்தர்களாகிய ஆழ்வார்களின் திருவுருவங்களும் கோபுரந்தாங்கிகளும் உருவாக்கப் பெற்றுள்ளன. இவ்வுருவங்கள் யாவும் தமிழ் நாட்டைச் சேர்ந்த திருப்புலானி என்னும் இடத்தைச் சேர்ந்த திரு. வீ. நாகலிங்கஸ் தபதியின் கைவண்ணம் பெற்றுத் திகழ்கின்றன.

இந்துக்களின் ஆலய அமைப்புமுறை மூன்று வகைப்படும் அவை நாகரம், வேசரம் திராவிடம் எனப்படும். இவற்றில் திராவிட நிருமாணக் கலையைத் தழுவியே பெரும்பாலும் இந்த இராஜகோபுரம் நிருமாணிக்கப் பட்டுள்ளது.

## விக்கிரகங்களின் அமைப்பு முறைகள்:

ஸ்ரீமந் நாராயணமூர்த்தி இந்நிலவுலகில் எடுத்த அவதாரங்கள் பத்து என வைணவ புராணங்கள் கூறுகின்றன. இத்திரு அவதாரங்களில் ஸ்ரீராம அவதாரமும், ஸ்ரீகிருஷ்ண அவதாரமும் இந்துக்களால் விருபபிப் பெரிதும் கொண்டாடப்படுகின்றன.

ஸ்ரீராம அவதாரத்தை விரித்துரைக்கும் இதிகாசத்தை இராமாயணம் என்றும், ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தையும் அவரின் லீலையையும் எடுத்தியம்பும் புராணத்தை ஸ்ரீமத்பாகவதம் என்றும் இந்துக்கள் அழைக்கின்றனர்.

இவ்விரு காதைகளின் முக்கிய கதைபகுதிகள் விக்கிரகங்களாக உருவாக்கப் பெற்று இக் கோபுரத்தில் இடம் பெறுகின்றன. அவை தசரதர் மைந்தனை இராமன் பிள்ளைப் பருவத்தே கைகேகியின் தோழியாகிய மந்தரையாகிய கூனியின் முதுகுப் பாகத்தே அமைந்த கூனிற்கு விளை

யாட்டிற்கு மண் உடைகள் அடித்த காட்சியும், விஸ்வாமித்திரமுனிவரின் ஆஞ்ஞைக்குக் கட்டுண்ட தசரதன் தனது அருந்தவப் புதல்வர்களான இராமனையும் இலக்குவனையும் முனிவரின் பின்னே தண்டகாருண்ய வனத்திற்கு அனுப்பி வேள்வி காத்து தாடகையை வதஞ்செய்த படலமும், விஸ்வாமித்திர முனிவருடன் மிதிலை நோக்கிச் செல்லும் வழியில் கல்லுருக் கொண்ட அகலிகை ஸ்ரீராமனது பாதம்பட்டு சாபவிமோசனம் அடைந்த காட்சியும், மிதிலையில் ஜனகம்காராஜனின் வில்தனை ஒடித்து, உப்பரிகைதனில் நின்ற சீதையின் சிந்தை கவர்ந்து இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கிய காட்சியும், கைகேசியின் கொடிய வரங் காரணமாக பதினன்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய ஜானகியும் இராமனும் வனம்புகுந்தபொழுது சித்திரகூடந்தனில் வேடுவனகிய குகனின் நட்பைப்பெற்று அவனையும் தனது சகோதரனக ஏற்றுக்கொண்ட காட்சியும்.

வனவாசத்தின் பொழுது சூர்ப்பனகை இராமனிடத்தும், இலக்குவனிடத்தும் கொண்ட தகாத காதலைக் கண்டித்து இலக்குவன் சூர்ப்பனகையின் மூக்கை அரிந்த காட்சியும், சீதையைக் கவர்ந்து செல்லும் பொருட்டு இராவணன் மாரீசனை மாயமானக அனுப்பி, அம்மான் இராகவனின் அம்புபட்டு வதையுண்ட படலமும் இராவணனல் வதையுண்ட சடாயுப் பட்சியும், சீதையைத் தேடிச்சென்ற இராம, இலக்குமணர் கிஸ்கிந்தா காண்டத்தில் அநுமனைச் சந்தித்து சுக்கிரீயனது அரசை வாலியிடம் இருந்து பெறும் பொருட்டு, இருவரும் பொருதும் பொழுது ஸ்ரீராமன் ஏவிய கணை ஏழு மராமரங்களைத் துளைத்து வாலியின் நெஞ்சகத்தே புகுந்த காட்சியும்.

அசோகவனத்தில் சிறையிருந்த செல்வியாகிய சீதையிடம் சென்று அநுமன் கணையாளி பெற்றுவந்த காட்சியும் இராம இராவண யுத்தமும், ஸ்ரீராம பட்டாபிசேக நிகழ்ச்சிகளும் இவையாவும் திறம்படச் சித்தரிக்கப்பெற்று ஏழுநிலை கோபுரந்தனில் தென்பாகம் முழுதும் விரவிக்கிடக்கின்றன

இதுபோன்றே ஸ்ரீகிருஷ்ணபகவானது குழந்தைப் பிராயத்தையும், லீலைகளையும் சித்தரிக்கின்ற சுதை விக்கிரகங்களும் உருவாக்கப் பெற்றுள்ளன அவை: குழந்தையாகிய கண்ணன் ஆயிலையில் நின்று காற் பெருவிரலை சுவைக்கும் காட்சியும், குழந்தையாகிய கண்ணன் பசுக்கன்றுகளை அவிழ்த்துவிட்டு ஆயர்பாடிப் பெண்களுக்கு கொடுக்கும் இன்னல்களும், கண்ணன் வெண்ணைக் கலயத்தைத் திருடி உண்ணும் காட்சியும், கண்ணன் தன்னைக் கொல்ல எத்தணிக்கும் பூதகியின் மாயை அறிந்து அவள் முலையுண்டு அவளை வதஞ்செய்த காட்சியும். குறும்பு செய்த கண்ணனை ஜசோதை உரலுடன் சேர்த்துப் பிணைத்த போது கண்ணன் உரலை உருட்டிச்சென்று விருட்சமாகி நின்ற நள, கோபர் இருவருக்கும் சாப விமோசனம் அளித்தமையும் பசுக்கன்றுகளைக் காக்கும் கோபாலனக நின்ற காட்சியும்,

ஜலக்கிரீடையில் ஈடுபட்டிருக்கும் கோபி காஸ்திரிகளின் ஆடைகளைக் கவர்ந்து சென்று ஒரு விருட்சத்தில் மறைத்து வைக்கும் காட்சியும், கண்ணன் தனது தாய்மாமனை கம்சனை வதஞ்செய்யும் காட்சியும், குருசெந்திரந்தில் கௌரவர்க்கும் பாண்டவர்க்கும் நடைபெற்ற யுத்தத்திற்கு முன் பார்த்தனுக்கு தேர்ச்சாரதியாகி கீதை உபதேசம் செய்தமையும், திவ்விய காட்சிகளாக உருவாக்கப்பெற்று ஏழுநிலக் கோபுரத்தின் வடபாகந்தனை அலங்கரிக்கின்றன

இது மாத்திரமன்று கோபுரத்தின் ஏழாவது நிலத்தின் தென்புறத்தே ஸ்ரீ மகாலட்சுமியின் திருவுருவமும், வடபுறத்தே ஸ்ரீ ஆண்டாளின் திருவுருவமும் மற்றைய நிலங்களில் ஸ்ரீதேவி, பூமிதேவி சமேதரான ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளும் ஆதிசேஷன் மீது அருந்துயில் கொள்ளும் ஸ்ரீ ரெங்கநாதர் திருவுருவங்களும கண்களுக்கும் சிந்தைக்கும் விருந்தளிக்கும் தன்மையில் உருவாகப் பெற்றுள்ளன

எழில்மிகு ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் தச அவதாரங்களான மச்ச, கூர்ம, வராக் நரசிம்ம, வாமன, பலராம, இராம,

பரசுராம, கிருஷ்ண, கல்கி ஆகிய எழில் உருவங்கள் முதலாம் நிலந்தொடங்கி ஏழு மாடங்கள் வரை விரவிக்கிடக்கின்றன

கருடப் பட்சி தனில் ஸ்ரீ மகாவிஷ்னு தனது தேவியருடன் வீற்றிருக்கும் காட்சியும் ஆதிமூலமேயென்று அபயக்குரல் எழுப்பிய க்ஜேந்திரனை முதலை வாயில் நின்று மீட்டமையும் கண்ணன் இராதையுடன் குலவும் காட்சியும், ஸ்ரீ முருகன் வள்ளியுடன் காதல் புரியும் காட்சியும் செவ்விய முறையில் அமைந்துள்ளன.

விஷ்ணு பக்தர்கள் ஆகிய ஆழ்வார்கள் பன்னிருவரும் முறையே ஆறு கோபுர நிலங்கள் தோறும் இருவராக நின்று ஸ்ரீமந் நாராயணமூர்த்தியின் விஸ்வரூபதரிசனத்தையும், அவன் மாநிலந்தனில் மானிடர் உய்யும் பொருட்டு எடுத்த அவதாரங்களையும் மற்றும் லீலா விநோதங்களையும் கண்டு மனமுருகி பக்தி, பரவச நிலையில் அவன் பாதமலரைச் சேவிக்கும் தன்மையை காணக்கூடியதாகவிருக்கின்றது. அத்துடன் கோபுரந்தாங்கிகளாக உருவெடுத்து நிற்கும் திருவுருவங்கள் பகவானின் அற்புதசாகரத்தில் திளைத்து நிற்கின்ற தன்மையை ஒத்துள்ளன.

இக்கோபுரத்தில் இடம் பெற்றுள்ள காட்சிகளையும், எழில் வடிவங்களையும் சொல் ஓவியத்தில் அமைக்க எம்மால் இயலாது. இவை கண்பெற்றோர் கண்டு மகிழக் கூடிய கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

சுபம்

---

# ஸ்ரீ வேங்கடேசப் பெருமாள்

[ஸ்ரீமதி லலிதா றங்கநாயகி ஜெயகநாதன்]

ஒவ்வொரு மதத்திற்கும் மகா வாக்கியங்களுண்டு இந்துக்களுக்கு ஸ்ரீமத் பகவத்கீதைபோல மகமதியருக்குக் குர்ஆனும், கிறிஸ்தவருக்கு பைபிளும் இருக்கின்றது.

உலகத்தில் தோன்றிய சீவராசிகள் யாவும் வாழப்பிறந்தவை. அவைகளை வாழக் காட்டும் வழியே! கீதை! அடுத்தடுத்து அவசரமாக "கீதா" என்ற வார்த்தையைப் பலமுறை சொன்னால் தாகி, தாகி என்ற சப்தம் வருவதைப் போலக் கேட்கும். உலகப் பற்றைவிட்டுத் துறவு கொள்ளுங்கள் என்று ஒரே வார்த்தையில் போதிக்கின்றது. கீதை பதினெட்டு அத்தியாயங்களும், பதினெட்டு மேளங்களைப் போல இளமை தொட்ட விறுவிறுப்புடன் முதுமை தொட்ட மோஸந்யாசமுடன் முடிகிறது.

பூதேவியின் குழந்தைகளாகப் பிறந்த எமக்கு ஆடம்பர வாழ்க்கையைக் கொடுக்கவல்லவன் பீதாம்பர தாரகன் ஸ்ரீமத் நாராயணய மூர்த்தியே. இவரை அடைய யாம் ஸ்ரீதேவி, லக்ஷ்மி தேவி பக்தர்களாக வேண்டும். இந்தக் கைங்கரியத்தை அடைய அனுகூலமான இடம் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலுள்ள ஸ்ரீ பெருமாள் ஆலயமாகும். இங்கே மூலஸ்தானத்தில் ஸ்ரீ தேவி, பூதேவி லக்ஷ்மிதேவி சமேத வெங்கடேச வரதராஜன் பரப்ரஹ்மனே ஆகின்றுன். உலக மண்ணை யுண்ட மாயவனுக இருப்பதால் திருப்பதியாகிய பொருப்பதியாகியது. இப்பதி பல சுருதிகளும் ஸ்மிருதிகளும் நிறைய உடையன. அவைகள் பாஷ்யங்களாகிப் பல நூல்வடிவாக முன் வெளிவந்துள்ளன.

என்னுடைய சொரூபத்தையும் நான் உயிர்களுக்கெல்லாம் ஈசனுயிருப்பதையும் அறியாத மூடர்கள் ஒரு மானுடவடிவமெடுத்தவன் என்றெண்ணி என்னை அவமதிக்கின்றனர் என்று பகவான் (9 - 11) கீதையில் கூறுகின்றுன். தியானயோகத்தில் தன்னைத் தன்னாலே உயர்த்திக் கொள்க.

தன்னை இழிவுபடுத்தலாகாது. இதனால் ஆலயதரிசனம் வற்புறுத்தப்பட்டுள்ளது. ஆலயம் மனித சரீரம் போலுள்ளது ஐந்து கல்லால் உண்டாக்கப்பட்ட சரீரத்திற்கு ஒன்பது வாயில்கள் உள்ளது. உட்செல்லவும் வெளிப்படுத்தவும் இரண்டு பிரதான வாயில்கள் போல் ஆலயங்களுக்கும் முக்கியமாக இரு வாயில்களே அமைந்திருக்கின்றன. இருவாயில்களிலும் கோபுரமுள்ள ஆலயங்களும் உண்டு. கர்ப்பக்கிரகத்திற்கு எதிரே உள்ள வாயிலில் கோபுரம் வைப்பதே மரபாய் விட்டது.

கோபுரத்தை அடைந்ததும் வாயிலில் சரணம் அடைந்து வீழ்ந்து நமஸ்கரித்து, கருடனை மன்றாடி, எசமானைக் காண்பதற்கு உத்தரவு கேட்கின்றோம் கருடன் துஷ்ட நிக்கிரகமும் சிஷ்யபரிபாலனமும் செய்யும் இறையைக் காணப் பரிவார மூர்த்திகளை அனுமதி பெற்று வருமளவும் பார்வையை மறைத்திருப்பார். மாதவியோ கண்ணகையோ? வந்தவள் யாரடி என்று கோவலன் கேட்டது போல கருடாழ்வார் கேட்டபடி இருப்பார். அருட்ஷித்து வரும் அடியாரைத் தெரிதனைக்கு அங்கீகரித்து நிற்கின்றார். வாயிற்காப்பாளன் அனுமன் சத்திரிய தர்மத்தை வளர்க்கும் தேர் வீரா வேசத்துடன் நிற்கிறது. வெற்றிச் சங்கு ஊத, வேதங்கள் வெளிவீதியில் ஆரவாரிக்கின்றன.

மானிடனே! ஏழுபிறப்பையும் தசஅவதார மூர்த்தியையும் கண்டு உழன்று வருக! என்று சொல்லட்டுமா? அல்லது தியாக யோகத்தில் கட்டுண்டு பிறப்பை ஒழிக்க வருகிறார் என்று சொல்லட்டுமா? வர்ணக் கோபுரம் மாயையின் படித்துயரத்தை கலைகள் மூலம் கண்கவர்ச்சியால் கவர்கின்றது. இச்சையில் ஈடுபட மானிடனுக்கு பொருள் வேண்டும் பொருளுக்கு அதிபதி லக்ஷ்மி நாராயணன், லக்ஷ்மி தேவியோ ஏக பத்தினி விரதத்தை அனுஷ்டிப்பவள். எல்லாச் சொரூபத்திலும் லக்ஷ்மியே அவனுடைய கோடானுகோடி ரூபங்களுக்கும் மார்பில் இருப்பவள். அவனும் அவள் மார்பில் இருப்பவன் ஆகையால் லக்ஷ்மியே நாராயணனை வேண்டி வாழ்த்தி இச்சையை அனுபவித்துப் பின்பு முதிர்பருவத்தில் பேரின்பவாழ்வு வாழ்வீராக! பூ வேணும் கொய்து சென்று நிறையக் கொடுங்கள். கொடுக்கக் கொடுக்க நீங்களும் நிறைவீர்கள்.

சண்முகப்பிரியா ஆதி

செய்தேனோ பிழையேதும்
செவிபடா சேவகனே
உய்வேனோ இனியேனும்
உமையாள் சோதரனே
கைமேலே பலன் தருவாய்
கதாயுத மன்மதா
எய்யாய் சக்கரத்தால்
வெற்றிச் சங்கு கேட்டருளே.

மோகனம் ஆதி

பல்லவி

உன்னையில்லா இன்பமுண்டோ
அன்னை அவர்மேல் மங்கை இருப்பின்

அனுபல்லவி

திருமகளாக திரவியம் குவிக்கும் திருப்பதியில்
மருவி விளையாடும் மாயவனுடன் மயங்கி

சரணம்

மோஹனனுக மொய்க்கும் மோகனே என்னை
மோஹனனுக்கு மோந்து கொண்டாயே எம்
பூசணி மார்பில் புகுந்திடவே தேன்போலே
வாரனை வழிந்து கமழுதல்லோ.

ஸ்ரீ ராமஜெயம்

# நன்றியுரை

யாழ்நகரில் வண்ணையம்பதியில் எழுந்தருளினின்று பக்த கோடிகள் வேண்டுவன வற்றை ஈந்து அருட்பெருங் கருணை பொழியும் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதரான ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமானின் திருவருட்தன்மையினுலும் அநுக்கிரகத்தினுலும் இவ் அரும்பெரும் இராஜகோபுர மணிக்கோபுரத் திருப்பணிக் கைங்கரியம் குறுகிய காலத்தில் நிறைவுற்றமையை எண்ணி முதற்கண் வணக்கத்தை எம்பெருமானுக்குத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

இவ்வாலயத்தில் நிருமாணிக்கப்பட்ட இராஜகோபுர மணிக்கோபுரங்களுக்கு நிதி உதவி ஈந்த கொழும்பு, யாழ். வர்த்தகப் பெருமக்களுக்கும், கன்ன பக்தர்கட்கும் ஈழம் வாழ் சைவ, வைணவப் பெருமக்கள் அனைவருக்கும் எமது தேவஸ்தான ஆதீன மகா சபையின் இராஜகோபுரத் திருப்பணிச் சபை நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இராஜகோபுர மணிக்கோபுர கட்டட நிருமாணங்களை செவ்வனே அமைக்க சீரிய திட்டங்களை வகுத்த தருமகர்தர் குழுவினருக்கும், எல்லாவற்றையும் திறம்பட விரைவில் நிறைவேற்ற உறுதுணையாக இருந்த இராஜகோபுர மணிக்கோபுரத் திருப்பணிச் சபை முதல்வர் அவர்களுக்கும், அல்லும் பகலும் விடா முயற்சியுடன் கோபுர நிருமாண வேலைகளை மேற்பார்வை செய்து, இதன் வரவு செலவு கணக்குகளை செவ்விய முறையில் வழிப்படுத்திய தனதிகாரியவர்கட்கும், இராஜகோபுர மணிக்கோபுர நிருமாண வேலைகள் பூரண நிறைவெய்த பூரண ஒத்துழைப்பை நல்கிய இச்சபையின் செயலாளர், மற்றும் தர்மகர்தர்களுக்கும் இச்சபையின் நன்றி உரித்தாகுக.

இராஜகோபுர மணிக்கோபுர நிருமாண வேலைகளில் பொருட்டு நிதி உதவி சேகரித்துக் கொடுத்த தேவஸ்தான ஆதீன மகாசபை அங்கத்தினருக்கும், பக்தர்கட்கும், இராஜகோபுரத் தளங்கள் ஏழையும் ஒழுங்குற அமைத்து அவற்றில் அழகிய சுதை விக்கிரகங்களை அமைத்து புராண வரலாற்றை சித்தரித்து கோபுரத்தை எழில் பெறச் செய்த தமிழ் நாட்டு சிற்பாசிரியர் வி. நாகலிங்கம்குழுவினருக்கும், மணிக்கோபுரத்தை உருப்பெறச்செய்த ஏழாலை மார்க்கண்டு குழுவினருக்கும், மணிக்கோபுரத்தில் நிலைபெற்றிருக்கும் பெரிய அசையா மணியை வார்த்து உதவிய நல்லூரைச் சேர்ந்த சின்னராசா குழுவினருக்கும் இச்சபையின் நன்றி உரித்தாகுக.

கும்பாபிஷேகக் கிரிகைகளில் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்த சகல குருமார்கட்கும் பிராமணோத்தமர்களுக்கும், விழாவைச் சிறப்பித்த நாதஸ்வரக் கலைஞர்கட்கும், வானொலி அஞ்சல் மூலம் வைபவத்தை சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினருக்கும், மற்றும் தொண்டர் கோஷ்டியினருக்கும் இச்சபையின் நன்றி உரித்தாகுக.

இராஜகோபுர கும்பாபிஷேக மலருக்கு ஆசியுரை வழங்கிய இந்துசமய ஆச்சாரியர்கட்கும், கட்டுரை வழங்கிய பெரியோர்கட்கும், இராஜகோபுரத்தில் இடம்பெறும் சிற்பங்களை நிழற்படமாக்கி உதவிய புகைப்படக்கலைஞர்கட்கும், விளம்பரங்களை கொடுத்துதவிய அன்பர்களுக்கும், இம்மலரை வெளியிட்டு உதவிய அச்சகத்தாருக்கும், கும்பாபிஷேகத்தை கண்டு தரிசித்த பக்தப் பெருமக்களுக்கும் எமது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது இச்சபை.

சுபம்!

**இராஜகோபுரத் திருப்பணிச்சபை**
**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**
**யாழ்ப்பாணம்.**



மிதிலையில் சீதை
இராமனை
கண்ணுற்ற காட்சி.



மிதிலையில் இராமன் சீதையை கண்ணுற்ற காட்சி.

## கோபுர நிர்மாண உதவியாளர்கள்



*கணக்கப்பிள்ளை:* திரு. கண்ணையா செட்டியார்

*பரிசாரகர்:* பிரம்ம ஸ்ரீ K. P. தாமோதர ஐயர்

*கோவில் உதவியாளர்கள்:* திரு. மு. வடிவேலு

திரு. சொக்கலிங்கம்

With the Best Compliments of

**SEASONS**
**229, MAIN STREET,**
**COLOMBO-11.**

T. Phone: 24393

Contact

For your packing on

Any Variety of Textiles

QUICKOS PACKING

182, SEA STREET,

COLOMBO-11.

WITH THE BEST COMPLIMENTS OF

**HIRDARAMANI LTD.**

65, CHATHAM STREET,
FORT.

T. Phone : 25456

With the Best Compliments of

**PEARL TEXTILES**

**145, Keyzer Street,**

**Colombo-11.**

*With Best Compliments from*

**M/s. Ranjana Stores**

52, Bankshall Street,

Colombo-11.

Phone : 25851

*With the Best Compliments of*

# RATNA STORES

120, THIRD CROSS STREET,
COLOMBO 11.

T. Phone : 26716

With Best Compliments from

## M/S. VASANDA'S LIMITED

Whole Sale Dealers in Textiles
and
Ready Made Garments

**104, Third Cross Street,**
**COLOMBO-11.**

**T. P. 27871**

With the Best Compliments of

DESIGN TEXTILE CENTRE
Keyzer Street,
Colombo-II

*With the Best Compliments of*

# Ceyma Silk Industries Ltd.

*MANUFACTURERS OF RAYON, SYNTHETIC & COTTON TEXTILES*

*8 A, Sir Chittambalam, A. Gardiner Mawatha,*

*COLOMBO - 2*

T'Phone: **35910**

*FACTORY:*

*THIRUNELVELY,*
*JAFFNA.*

*T'Phone:* **7170**

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் இராஜகோபுர, மணிக்கோபுர கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற எல்லாம் வல்லவர் அருள்சுரந்து வரமருள பிரார்த்திக்கின்றேன்.

சிவாஜி துரை,
68 A, டேவிட்பென் ரோட்,
கொழும்பு - 4.

*With the Best Compliments of*

# *Ceylon Synthetic Textile Mills Ltd.*

752, Baseline Road,

Colombo - 9

*With the Best Compliments of*

# Tolarams

*493, Galle Road,*

*BAMBALAPITIYA.*

*T'Phone:* **88042**

With the Best Compliments

of

*Nanda Textiles*

140, Keyzer Street — Colombo-11.

***With Best Compliments***

*from*

**VILASINI**

**148, KEYZER STREET,**

**COLOMBO-11.**

T. Phone: 24719

*Space Donated by*

## *Siva Tex*

*(Dealers in Textiles)*

*10, China Street,*

*Colombo-11.*

With the Best Compliments of

# RAVI PACKING

**180/6, KEYZER STREET,**

**COLOMBO-11.**

With Best Compliments
from

NAVARANGS
167, Main Street,
COLOMBO-11.

T. Phone: 24318

With the Best Compliments of

SUJATHA TEXTILES
*(Dealers in Textiles)*
82, Third Cross Street,
Colombo 11.

T. Phone : 23215

With Best Compliments

**PETTAH TEXTILES**

**67, Bankshall Street,**

**COLOMBO-11.**

With the Best Compliments of

**KALA TRADING Co.**

134, 2nd Cross Street,

Colombo-11.

Phone: **25250**

With the Best Compliments
from

**PEOPLE'S INDUSTRIES LIMITED**

Grinders of Cereals, Manufacturers of
People's pappadam & Exporters of
Sri Lanka products

| Factory & Office | Sales Depot |
|---|---|
| 256/2 Negombo Road, Wattala. | 229, Fifth Cross St, Colombo 11 |
| T. Phone : 277 (Wattala) | T. Phone : 33864 |

*With the Best Compliments of*

**JEYA MURUGANS**

**75, KEYZER STREET,**

**COLOMBO-11.**

With Best Compliments

from

**LUCK DEAL**

145 1/5, KEYZER STREET,

COLOMBO-11.

Phone 21758

WITH BEST COMPLIMENTS

FROM

***Kamala Jewellers***

84, Sea Street,

Colombo-11.

T. Phone : 27648

With the Best Compliments of

**M. GOPAL**
**256/5, Negombo Road,**
**WATTALA.**

*Space Donated*
*by*

*N. Shanmugam*

*With the Best Compliments from*

**Chemi-Products Organisation**

75, KEYZER ST.,
COLOMBO-11.

Phone : 31729

With Best Compliments

**JAYALALITHA JEWELLERY MART**

65, Sea Street,
COLOMBO.

*With Best Compliments from*

**Sri Venkateshwara's Combine**

1/1, WELISARA — RAGAMA.

T. Phone: 0782/203

FOR YOUR QUALITY TEXTILES

VISIT —

# NEW SARASWATHY'S

**162, MAIN STREET,**

**COLOMBO - 11**

T'Phone: 23361

FOR QUALITY

**Printing Works**
**Book Bindings**
**Process Block Makings**
**& Rubber Stamp Makings**

CONTACT

# Alcon Printers

33, Vivekananda Hill,
COLOMBO-13

T'Phone: 33685

Space Donated By

**Ceylon Commercial Co.**

211, Main Street,
COLOMBO.

*With the Best Compliments of*

**R. RAJALINGAM**

With the Best Compliments of

**SANTHA TEXTILES**

**212, MAIN STREET,**

**COLOMBO - 11**

WITH THE BEST COMPLIMENTS FROM

**RATNAM'S**

146, 2nd Cross Street,

COLOMBO-11.

T. Phone : **20406**

WITH THE BEST COMPLIMENTS OF

**Basheer Traders**

Wholesale Dealers in Textiles

*210, Main Street,*

*Colombo-11.*

Phone : 26154

Telegrams : "BASHEERTEX"

With the Compliments

of

**Crowns Department Store**

(A Shop in a Million, where Millions Shop)

**118, Main Street,**

**Colombo-11.**

Phone: 22170
26849
26942

Cables: CROWN SILK

*With the Best Compliments of*

# JAYANTHI TEXTILE

134, KEYZER STREET,
COLOMBO 11.

*Space Donated By*

# FASHIONS

KEYZER STREET
COLOMBO 11

*With the Best Compliments of*

GOLDEN TEXTILES

Main Street,
VELIVERIYA.

WITH THE BEST COMPLIMENTS OF

**COMRADES**

No. 5, New Market,
KANDANA.

WITH THE BEST COMPLIMENTS OF

**Kassam Bros.**

89, Third Cross Street,
Colombo-11

WITH THE BEST COMPLIMENTS OF

NOOR MOHAMED & SONS.

129, THIRD CROSS STREET,
COLOMBO-11.

T. Phone : 29128

*Space Donated By*

**P. B. UMBICHY LTD.**
**175, BANKSHALL STREET**
**COLOMBO 11.**

*With Best Compliments from*

**MILK BAR**

**MAIN STREET, JAFFNA.**

With Best Compliments

**N. NAVAM & CO.**

**MAIN STREET, JAFFNA.**

With Best Compliments

# LANKA MEDICALS

**71, L. M. Colombo Street,**
**KANDY.** Phone: **2030**

**DISTRIBUTORS FOR**

- STATE PHARMACEUTICALS CORPORATION OF SRI LANKA
- MACKWOODS INDUSTRIES LTD.
- CHEMICAL INDUSTRIES ( COLOMBO LTD. )
- UPLAND CHEMIST ( INDUSTRIES )
- O. D. S. PHARMACEUTICALS

**Distribution Centre**

**90, Bankashall Street,**
**COLOMBO - II** Phone: **20897**

With Best Compliments

GOLD HOUSE

தங்க மாளிகை

KANNATHIDDY,

JAFFNA.

*Coble:* Jewellers    *Dial:* 281

பச்சை மால் மலைபோல் மேனி

ஸ்ரீ சிவகாமி

கைத்தறி நெசவு நிலையம்

இணுவில் கிழக்கு,

சுன்னாகம்.

உடலுக்கு ஒளியளிப்பது கண், உயிருக்கு ஒளி தருவது ஞானம், உலக உயிர்களுக்கெல்லாம், ஞான ஒளி தருகிற கண்ணுகை இருப்பவனே கண்ணன். அவனின் இராஜகோபுர விழாக் காணும் இந்நாளில் நாட்டில் உள்ள எல்லா மக்களிடையேயும் தெய்வபக்தியும் நன்னடத்தையும் வேரூன்றி வளர ஸ்ரீமத் நாராயணனை பிரார்த்திக்கிறோம்.

அபிராமி ஜுவலர்ஸ்

387, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

Compliments from

S. K. MURUGESU & SONS

25, K. K. S. ROAD,

JAFFNA.

அழகிய பவுண் நகைகள்

தங்கப்பவுண், வைரங்களுக்கு

## கே. என். எம். மீரான் சாஹிப்

தங்கப்பவுண் நகைமாளிகை

நகை வியாபாரம்

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

*With the best Compliments from*

## KALAIVANI PRESS & BOOK DEPOT.

MAIN STREET, JAFFNA.

அன்பளிப்பு

இலங்கை புகையிலை கைத்தொழில்
கூட்டுத்தாபனத்தின் அங்கீகாரம் பெற்ற
விநியோகத்தர்:

**சுகந்தன் வியாபார நிலையம்**

கண்டி வீதி,

சைகதடி

கும்பாபிஷேகம் சிறப்புடன் நடைபெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின்
கமிஷன் விற்பனையாளர்கள்

**வெலிகம ஸ்டோர்ஸ்**

139, 4ம் குறுக்குத் தெரு,

கொழும்பு - 11

தொலை பேசி: 23271

Compliments from

Bharat Studio

82/1, Kasturiar Road,

Jaffna.

Phone: 252

ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமானின்
இராசகோபுர கும்பாபிஷேக
வைபவத்தின் போது
பெருமானின் அருள் எமது வாடிக்கைக்காரர்
களுக்கும் ஆதரவாளர்களுக்கும் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்.

வட இலங்கையில் பிரபல நகை வைர
வியாபாரிகள்

ஹரன் ஜுவலர்ஸ்
50, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

எப்பொழுதும் நீங்கள் விரும்பும்
தங்க வைர நகைகளை
திருப்தியுடன் பெறுவதற்கு
உகந்த இடம்

அ. மகாதேவா
நகை வியாபாரம்
(370), 258, 260, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 421

72.8

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

கோபுரதரிசனம் கோடி புண்ணியம்



மில்க்வைற் நீலசோப்

மேலுறைகளைச் சேகரித்து
அனுப்பிப் பரிசுகளைப் பெறுங்கள்

மில்க்வைற் சோப் தொழிற்சாலை, த.பெ.எண் 77, யாழ்ப்பாணம்.

ஆதரவு பெருகுதல் அறப்பணிக்கு உதவும்

மில்க்வைற் தொழிலகம், யாழ்ப்பாணம்


கொமேஷல் அச்சகம், 30, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 666/78.